மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ். இளங்கோ

காமராசரை கவிழ்ப்பதற்காகவே ராஜாஜி புதிய கட்சி ஆரம்பித்திருப்பதாக பெரியார் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியிருக்கிறார்!

மாலைமணி!
ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 | 22—11—59 | ஒலி 4

அருப்புக் கோட்டையே - நீ ஆராய்ந்து பார்!

சிதம்பரமே நீ சிந்தித்துப் பார்!

வடநாட்டிலுள்ள கண்டலா என்னும் இடத்தில் பல கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு, மிக பிர்மாண்டமான உழைப்பால் உருவாக்கப்பட்டத் துறைமுகம் இப்போது லாயக்கற்றது, உபயோக மற்றது, ஒரு துளியும் பயன் அளிக்காதது என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது!

வெள்ளைக்காரன் வெளியேறிய பின்பு, இந்தியத் துணைக் கண்டத்தை வடவர்கள் ஆளத் தொடங்கிய பின்பு கணக்கிலும், எண்ணிக்கையிலும் அடங்காத கோடி ரூபாய்கள் பாழாக்கப்பட்டிருப்பதை அனைவரும் அறிவார்கள்!

பலகோடி திட்டங்களை, பல கோடி ரூபாயில் ஏட்டிலே தீட்டினார்கள்! அதை செயல் வடிவாக்குவதற்கு முன்பு பல கோடி ரூபாய்களை பலவித பெயர்களில விழுங்கினார்கள்! கேட்டால் "ஐயோ ஐந்தாண்டு திட்டங்களை பழிக்கிறார்களே" என்று கூப்பாடு போட்டார்கள்! இவர்களெல்லாம் தேசத் துரோகிகள் என்று தூற்றித்திரிய ஆரம்பித்தார்கள்! இவர்கள் போட்ட திட்டங்கள் எத்தனை? அதில் நிறை வேற்றப்பட்டதிட்டங்கள் எத்தனை? அப்படி நிறைவேற்றப்பட்டத் திட்டங்களில் பயனளிக்கும் திட்டங்கள் எத்தனை? அப்படிப்பயனளிக்கும் திட்டங்களில் மக்களுக்கு பயன் கொடுக்கும் திட்டங்கள் எத்தனை? அப்படி பயன் கொடுக்கும் திட்டங்களில் தென்னாட்டு மக்களுக்குப் பயன் தரும் திட்டங்கள் எத்தனை? இதை ஆராய்ந்துப் பார்த்தால் நம் கண் முன்னாலே வந்து நிற்பது பெரிய கோழி முட்டை தான்!

இதுவரையில் எல்லா திட்டங்களையும் வடநாடு பயன் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு தீட்டப்பட்ட திட்டங்களேத் தவிர, தென்னாடு வாழ வேண்டும் என்ற எண்ணத்தோடு அல்லவே அலல!

தேவையில்லாத திட்டங்களை யெல்லாம் தீட்டினார்கள்! வடநாட்டிற்கு அவசிய மில்லாத திட்டங்களை யெல்லாம் தீட்டினார்கள்! வடநாட்டில் பயன் தர முடியாத திட்டங்களை யெல்லாம், பயன் தர முடியாத இடங்களிலெல்லாம் ஏற்படுத்த வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள்! அதன் பலனை இன்று அனுபவித்துக் கொண்டே வருகிறார்கள்!

வடநாட்டில் பெரும் பெரும் துறைமுகங்களெல்லாம் இருக்கின்றன! வடநாட்டில் இருக்கும் துறைமுகங்களால் வடநாடு வளமடைய முடியும், வாழ்வு பெற முடியும்! வடநாட்டிலுள்ள கல்கத்தா துறைமுகத்திற்கு ஈடு, இணை தென்னாட்டில் ஒன்று கூட கிடையாது! பம்பாய் துறைமுகத்தைப் போல் வசதியான துறைமுகம் தென்னாட்டில் ஏதுமில்லை!

பம்பாய் துறைமுகம், வளம் பெற்ற மேற்கத்திய நாடுகளோடு தொடர்பு கொண்டு வாணிபத்தைப் பெருக்கி வடநாட்டை வாழ வைக்கிறது! அதே போல், கல்கத்தா துறைமுகம், கிழக்கத்திய நாடுகளோடு தொடர்பு கொண்டு வடநாட்டை வளம் பெற வைக்கிறது! இரண்டு வசதி மிகுந்த துறைமுகங்களும், வாழ்வை அள்ளி அள்ளித் தரும் வகையில் அமைந்திருக்கும் நிலையிலும், இன்னும் பல துறைமுகங்கள் அங்கே சிறப்பான முறையில் இயங்கி வரும் நிலையிலும் ஒரு புதிய துறைமுகத்தை தோற்றுவிக்கப் பேராசைக் கொண்டார்கள்! பல கோடி ரூபாய்களை வாரி இறைத்தார்கள்! பயன் கிடைக்கவில்லை! ஏழைகளின் வரிப் பணம் பாழானது தான் மிச்சம்!

முப்புறமும் கடலால் சூழப்பட்ட தென்னகத்திற்கு புதிய துறைமுகங்களை ஏற்படுத்தி, தென்னாட்டை வாழ வைக்க வேண்டும் என்ற எண்ணம் வடவர்களுக்குத் துளியும் ஏற்படவில்லை! புதிய துறைமுகங்களை ஏற்படுத்த மனமில்லா விட்டாலும் சென்னை துறைமுகத்திற்கு இன்னும் பல வசதிகளை செய்யலாம்!

பண்டைய காலத்தில் புகழ் பெற்ற துறைமுகமாக விளங்கி, கிழக்கத்திய நாடுகளோடு பெரும் வியாபாரங்களை செய்து வந்த நாகை துறைமுகத்தின் இன்றைய நிலை என்ன?

சிறப்பான இடத்தில் அமைந்திருக்கும் தரங்கம்பாடி துறைமுகத்தின் இன்றைய கதி என்ன?

முதன் முதல் கடலிலே கலம் செலுத்தி சிறைபட்டு செத்து மடிந்த சிதம்பரனார் பிறந்தது தூத்துக்குடி என்பது உங்களில் யாருக்காவது நினைவிருக்கிறதா? அந்தத் தூத்துக்குடி துறைமுகம் சீரழிந்து கிடக்கக் காரணம் என்ன?

கொச்சியிலுள்ள துறைமுகம், இன்னும் மேற்கு கடற்கரையிலுள்ள துறைமுகங்கள் அனைத்தையும் சிறப்பாக, இன்னும் வசதியாக, அமைத்தால் மேற்கத்திய நாடுகளின் தொடர்பும் இன்னும் சிறப்பாக அமையும்!

தரங்கம்பாடி, காரைக்கால், நாகைப்பட்டிணம் போன்ற இடங்களிலுள்ள துறைமுகங்களை சீர் செய்தால் கிழக்கத்திய நாடுகளுடைய உறவு இன்னும் நல்ல முறையில் அமையும்!

துறைமுகங்கள் அமைப்பதற்கு வசதியான இடங்கள் தென்னாட்டில் தான் அதிகமாக இருக்கின்றன! அப்படி இருந்தும் வடநாட்டில் உருப்படாத இடத்தில் துறைமுகம் ஏற்படுத்த நினைப்பானேன்?

தென்னாடு வாழக் கூடாது என்ற எண்ணம் தானே? வடநாடு தான் வாழ வேண்டும் என்ற நினைப்பு தானே?

இப்படிப்பட்ட ஓரவஞ்சனைக்காரர்களோடு நாம் கூடி வாழ்ந்தால், கோடி கோடியான தீமைகளைத்தான் அனுபவிக்க வேண்டும்! இந்த உண்மையை தென்னாட்டில் வாழும் வடநாட்டுக் கங்காணிகளுக்கு உணர்த்துவது நமது கடமை யல்லவா?

காங்கிரஸ்கட்சிக்கு ஓட்டளித்து அதை வெற்றி பெற வைத்த சிதம்பரம் தொகுதி மக்களே! கொஞ்சம் சிந்தனை செய்து பாருங்கள்! நீங்கள் ஓட்டளித்தது எதற்காக? இப்படிக் கோடிக் கணக்கில் ஏழைகளின் வரிப்பணத்தைப் பாழாக்குவதற்கு தானா? இதைப் பற்றி அன்று சிந்திக்காவிட்டாலும் இனியேனும் சிந்தித்து ஒரு நல்ல முடிவுக்கு வாருங்கள்!

இத்திங்கள் 21-ம் நாள் ஓட்டளிக்க இருக்கும் அருப்புக் கோட்டை மக்களே! நீங்களாவது கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்!

தூத்துக்குடியில் துறைமுகமில்லை!

தரங்கம்பாடியின் துறைமுகம் சீரழிந்து கிடக்கிறது!

நாகைத்துறைமுகம் நல்ல வசதியோடு இல்லை!

காரைக்கால் துறைமுகத்தை செப்பனிட வழியில்லை!

வடநாட்டிலுளள மண்டலாவில் துறைமுகத்திற்கு என்ன அவசியம்? அதற்கு பல கோடியை ஏன் பாழாக்க வேண்டும்! இதைப் பற்றி கொஞ்சம் யோசித்துப் பார்த்து விட்டு, தேர்தல் சாவடிக்குச் செல்லுங்கள்! பிறகு உங்கள் இஷ்டம் போல் ஓட்டளியுங்கள்!

தென்னாட்டைவாழ வைப்பதும், அழிய வைப்பதும் உங்களுடைய கையில் தான் இருக்கிறது என்பதை மட்டும் மறந்து விடாதீர்கள்!

அதிகார போதையால், பதவி மயக்கத்தால் எதை வேண்டுமானாலும் செய்யலாம்! ஆனால் நாளைய தினம் வரும் சந்ததிகளுக்கு நீங்கள் கட்டாயம் பதில் சொல்லியாக வேண்டும் என்பதை மட்டும் மறவாதீர்கள், மறவாதீர்கள்!

பிற நாட்டவர்கள் நம்மை மதிக்க வேண்டுமானுல் "திராவிட நாடு" இலட்சியத்தை நாடெங்கும் பரப்புங்கள் !

கோம்பையில் அண்ணு கொள்கை விளக்கம்!

மதுரை மாவட்டம் கோம்பை, தி. மு. க. சார்பில் 7—11—59 அன்று நடைபெற்ற கூட்டத்தில் அறிஞர் அண்ணு ஆற்றிய பேருரை.

அன்புள்ள தலைவர் அவர்களே! அருமைத் தோழர்களே! இந்த ஊரில் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் மெத்த ஆர்வத்தோடு இவ்வளவு பெரிய கூட்டத்தை ஏற்பாடு செய்து, நானும் என்னைச் சார்ந்த நண்பர்களும், பேச வேண்டும் என்று அன்பழைப்பு விடுத்து எங்களுக்கு மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும்



அணிவித்தமைக்கு உங்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். கூட்டத் தலைவர் நான் நீண்ட நேரம் பேச வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். ஆனுல் நான் இங்கு பேசி விட்டு அடுத்து தேனியில் நடைபெற இருக்கிற கூட்டத்தில் பேச வேண்டும். நான் உங்களுக்குக் கூட்டத்திற்குத் தேதி தருகிற போது மழை இல்லை. இப்போது பலமாக மழை இருக்கிற காரணத்தினுல், விரைவில் முடிக்க வேண்டி இருக்கிறது. எனவே நாங்கள் சொல்வதை நீங்கள் ஒரு துளியும் தயவு தாட்சண்யமின்றி கேட்க வேண்டும். நாங்கள் ஒன்றும் புராணக் காலட்சேபம் செய்பவர்கள் அல்ல! கேட்டால் புண்ணியம், இல்லாவிட்டால் பாவம் சம்பவிக்கும் என்று சொல்ல. இவர் பேச்சைக் கேட்டால் பஸ் பர்மிட் கொடுப்பார்,! லைசென்சுகள் கொடுப்பார், பஞ்சாயத்து போர்டைக் கலைக்க மாட்டார் என்று அந்த ஆசையில் என்னுடைய பேச்சைக் கேட்க வேணடாம். நாங்கள் மந்திரிமார்கள் அல்ல, எங்களுடைய பேசசை பயந்தும் கேட்க வேண்டாம். ஆசையோடும் கேட்க வேண்டாம். கூர்ந்து கேட்க வேண்டும்.

எந்தக் கழகமும் எடுத்துச் சொல்லாததை நாங்கள் எடுத்துச் சொல்லுகிறேும். நண்பர் முத்து அவர்கள் சொன்ஞர்கள் விலைவாசிகள் ஏறிவிட்டது என்று. அப்படிப்பட்ட ஆட்சியை மாற்ற வேண்டும் என்று தான் சொல்லுகிறேும்! முன்னேற்றக் கழகம் இதைச் சொல்வது மட்டும் இல்லை. மற்றக் கட்சிக்காரர்கள் சொல்லாததை நாங்கள் சொல்லுகிறேும்! முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில்—ஆளுகின்ற கட்சியை மாற்ற வேண்டும் ஆகவே எங்களுக்கு ஓட்டுப் போடுங்கள் என்று சொல்லவில்லை! மற்றக் கட்சிக்காரர்கள் இந்தியா ஒரே நாடு என்று சொல்லுகிருர்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்று தான் இந்தியா ஒரு நாடு அல்ல—இந்தியா ஒரு உப கண்டம் என்று சொல்லுகிறது. பல மாநிலங்கள் ஒன்று சேர்ந்தது இந்தியா என்று சொல்லுகிறது, அந்தந்த நாடுகள் தனியாகி, விடுதலை பெற்ருல் தான், தனியாட்சி பெற்ருல் தான்—அந்த நாட்டுக்கு ஏற்றபடி நல் வாழ்வு பெற முடியும், இப்போது நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்—இந்தியா ஒரே நாடா? அல்லது பல்வேறு நாடுகள் சேர்ந்த ஒரு உபகண்டமா? என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தக் கூட்டம் இப்போது நடைபெறுவது தேர்தல் இல்லாத நேரம் எனவே நீங்கள் நிம்மதியாக ஆரஅமர எண்ணிப் பாருங்கள். காரணம் இரண்டு பேரும் சொல்வதை யார் சொல்லுவது பூகோளம் ஏற்றுக் கொள்ளுகிறது—சரித்திரத்திற்கு ஒத்துவரக் கூடியது என்று எண்ணிப் பார்க்காத வரையில் பலன் இல்லை. அதே போல் நாம் இது பனைமரம் என்ருல் இல்லை தென்னை மரம் என்று சொன்ஞல், நீங்கள் எந்த மரமாக இருந்தால் என்ன என்று இருக்கக் கூடாது மற்றவாகள் அதிகாரத்தால் டெல்லிக்காரர்கள் தான் இருக்க வேண்டும் என்று சொல்லுகிருர்கள். அவர்கள் சொல்லுவதில் நியாயம் இருக்கிறதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும் சொல்லுகிற அவர்கள் உலகப் புகழ் பெற்றவர்கள்! நாங்கள் சாதாரணமானவர்கள்! சொல்லுகிற அவர்கள் பெரியவர்கள். அவர்கள் மந்திரிகள்! எங்களைச் சிறையில் தள்ளுகிவவர்கள் அவர்கள் சொல்லுவதை நாங்கள் மறுக்கிறேும்! பணக்காரனைப் பார்த்தால், அவன் பக்கத்திலே இருக்கும் ஏழை மானத்தில் கருக்கல் இருக்காது—என்ருலும் பணக்காரன் மழை வரும் போல்இருக்கிறது என்று சொன்ஞல் ஆமாம் மழை வரும் என்று சொல்லுவான், பிறகு அதே பணக்காரன் அவனைப் பார்த்து மழை வராது என்று சொன்ஞல்—ஏழை ஆமாம் மழை வராது என்று சொல்லுவான். அதைப் போல இங்குள்ளவர்கள், அவர்கள் இந்தியா ஒரே நாடு என்று சொன்ஞல், ஆமாம் என்று சொல்லுகிருர்கள். சரித்திரத்தைப் பாருங்கள் அதிலே தெளிவாக எழுதியிருக்கிறது, இந்தியா ஒரு நாடல்ல என்று. நீங்கள் பூகோளத்தை நம்புவதா அல்லது அவர்கள் சொல்லுவதை நம்புவதா என்ருல்! செட்டியாரை நம்புவதா? அவர் நெற்றியில் இருக்கும் விபூதியை நம்பு

(10-ம் பக்கம் பார்க்க)

ஏழை போர்வீரனுனல் - போர்க் கொடி உயர்த்திஞல் ஆட்சியினரால் ஏதும் செய்ய முடியாது !

கைகளே துப்பாக்கி - பெருமூச்சே வெடிகுண்டு !!

கோட்டை கொத்தளங்கள் அத்தனையும் தூள்! தூள்!!

சென்னை மயிலைத் தொகுதி உணவு விலை குறைப்பு சர்வக் கட்சிக் குழுவின் சார்பில் 16-11-59 அன்று மயிலையில் சர்வ கட்சிக் கூட்டம் நடைபெற்றது.

கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர் பி. ஆர். ராம



லிங்கம் முன்மொழிந்தார். தி. மு. க. தோழர் கே. பிரம்மையா வழிமொழிய நகராட்சி மன்ற தி. மு. க. உறுப்பினர் தோழர் கபாலி தலைமை வகித்தார்.

உணவு விலை ஏற்றத்தைக் கண்டித்து தோழர்கள் இதய வேந்தன் (தமிழரசுக் கழகம்), கோபிநாதன் (புரட்சிகர சோஷலிஸ்ட்) லஜபதி (புரட்சிகர சோஷலிஸ்ட் தொழிலாளர் இயக்கம்) நா. வா. கலைமணி, (நாம் தமிழர் இயக்கம்) அப்பன் ராஜ் (தமிழ் நாடு சோஷலிஸ்ட்) மணலி கந்தசாமி (கம்யூனிஸ்ட் கட்சி) ஆகியோர் பேசினர்.

கலைஞர் கருணாநிதி போர்முரசம் !

இறுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கலைஞர் கருணாநிதி அவர்கள் பேசினர்,

கலைஞர் கருணாநிதி அவர்கள் பேசியதாவது—

அன்புள்ள தலைவர் அவர்களே! பெரியோர்களே, தோழர்களே! நாமெல்லாம் இங்கே கூடியிருப்பதைப் பற்றி இதுவரை எல்லா கட்சியைச் சேர்ந்த நண்பர்களும் மிகமிக விளக்கமாக உங்களிடத்திலே கூறியிருக்கிருர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நானும் சில கருத்துக்களை சொல்லி, அருமைத் தோழர்கள் சொன்ன கருத்துக்களை சர்வ கட்சி சார்பாக எடுத்துக்கூறி உங்கள் ஆதரவு கோரி நின்றிருக்கிறேன்.

காங்கிரஸ் ஆட்சியில் எத்தகைய அதிர்ச்சியும், பயமும், அச்சமும் மக்கள் வாழ்வில் இருக்கிறது என்பதை நாடாளும் மந்திரிகள் விடுக்கின்ற அறிக்கைகள் மூலமும், அவர்கள் ஊரெங்கும் பேசுகின்ற பேச்சையும் பத்திரிகைகள் மூலம் அறிவீர்கள்.

மணலி குறிப்பிட்டது போல தங்களுக்குரிய கொள்கை, திட்டங்களை, மக்கள் மத்தியிலே ஆளுக்கொரு கொள்கையாக எடுத்துக் கூறி இருந்தாலும் சர்வ கட்சிகள் ஒன்று சேர்ந்து இந்த குழுவை அமைத்திருப்பது மந்திரிகளுக்கு அதிருப்தியை தந்திருக்கிறது! அவர்கள் அதிருப்தி அடைவதற்குப்பதிலாக மகிழ்ச்சி அடைந்திருந்தால் புத்திசாலித் தனம் என்று கருதக்கூடும்.

விலைவாசி ஏற்றத்தைக் கண்டித்து—விலையை குறைக்க வேண்டுமென்று தனித்தனியாக கேட்டு கண்டித்தால் அதனைக் கட்டுப்படுத்த வேறு கட்சிக்காரர்களுக்கு உரிமை இருக்காது!

உதாரணமாக, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நாங்கள் உணவுப் பிரச்னையை எடுத்துக்கூறி, உணவுப் பிரச்னை தீர வேண்டுமானுல் ஆட்சியை எதிர்த்து புரட்சி செய்யுங்கள் என்று சொல்லியிருக்கக் கூடும். அதேபோல் கம்யூனிஸ்ட் கட்சியினரும் புரட்சியை தூண்டிவிட்டிருக்கக்கூடும்! மற்றும் சோஷலிஸ்ட், நாம் தமிழர் இயக்கம் அத்தனை பேரும் புரட்சியைத் தூண்டியிருக்க கூடும். தனித்தனி போராட்டம் நடத்திஞல் இங்கே உள்ள மந்திரிகளால் சமாளிக்க முடியாது!

திராவிட முன்னேற்றக் கழகம் கொஞ்சம் வேகமாக போனுல் கம்யூனிஸ்ட் கட்சி, கொஞ்சம் பொறு யோசித்து செய்வோம் என்று கூறி, ஒன்றுக்கொன்று இணைந்து வந்து ஒருவர் முடிவு வேகமானுல் அதை குறைத்து அமைதியான முறையில் செயலாற்ற-பொறுத்துப் பார்க்கும் சூழ்நிலை இந்த சர்வ கட்சி குழு அமைப்பாலே ஏற்பட்டிருக்கிறது! இது காமராசரின் நல்ல காலம்—காங்கிரசின் நல்ல காலம்!

இந்த விலை வாசி ஏற்றத்தை தனித்தனியே கண்டிக்க எண்ணியிருக்குமேயானுல் கம்யூனிஸ்ட் கட்சி போர்க் கொடியை உயர்த்தி 'பார்த்தீர்களா! பார்த்தீர்களா! காங்கிரஸ் ஆட்சியின் கொடுமையை, கொடுமையின்றி வாழத்தான் கம்யூனிஸ்ட் ஆட்சி வேண்டுமென்கிருேம் என்று கூறியிருக்கலாம்,

நாம் தமிழர் இயக்கத்தினர் 'இக் கொடுமை நீங்குவதற்காகத் தான் தனித் தமிழ் நாடு கேட்கிருேம் வாருங்கள்' என்று கூறியிருக்கலாம்.

சோஷலிஸ்ட் கட்சியினரும், 'காங்கிரஸ் ஆட்சியில் சோஷலிஸமில்லை நேரு சர்க்காரை மாற்றியமைப்போம் வாருங்கள் என்று கேட்டிருக்கலாம்.

ஒவ்வொரு கட்சியும் இந்த பிரச்னையை தங்கள் தங்கள் கட்சிக்கு சாதகமாக்கிக் கொண்டிருக்க முடியும், ஒவ்வொரு கட்சியும் சாதகமாக்கிக் கொள்ளாமல் மக்கள் பிரச்னையாக கருதி சர்வ கட்சியும்கூடி இதுபோன்ற கூட்டங்களை கூட்டி சர்க்காருக்கு குறைகளை நினைவுபடுத்துகிறது.

நாம் தமிழர் இயக்கத்தின் நெஞ்சத்திலே உள்ள கொள்கை வேருக இருக்கலாம். நெஞ்சம் வேருக இருந்தாலும், நெஞ்சுக்கு கீழே இருக்கும் வயிறு ஒன்றுதான்! நோய் நொடி இருக்கின்றவர்களுக்கு வேண்டுமானுல் உணவுபிரச்னை இல்லாமல் இருக்கலாம்!

உணவுப் பிரச்னை என்பது ஒரே நிலை என்ற நிலைமைதான் எல்லோரும் இப்படி சர்வ கட்சி குழு கூடியிருப்பதற்கு காரணம்!

இக்கொள்கையை பரப்ப, கட்சி மாச்சர்யத்திற்கு இடந்தராமல் அரசியல் நாகரிகத்திற்கு உடன்பட்டு கூட்டு முன்னணி என்ற பெயராலே போர்க் கொடியை உயர்த்தியிருக்கிறது!

விலை வாசி உயர்ந்து விட்டதே என்று அமைச்சர் பக்தவச்சலத்தைக் கேட்டால் 'விலைவாசி ஏற்றத்திற்கு நாங்கள் என்ன செய்வது! மளிகைக் கடை வைக்கச் சொல்கிறீர்களா என்று பதில் கூறியிருக்கிருர்! அவர் தந்திருக்கும் பதில் ஆச்சர்யத்தை தந்திருக்கிறது, 'செய்தால்தான் என்ன? அதற்காவது நீங்கள் லாயக்கா?

பக்தவச்சலம் மளிகைக் கடை வைக்கட்டுமா என்கிருர்! புளி

(5-ம் பக்கம் பார்க்க)

ஏழையின் புரட்சிப் புயலைத் தடுக்கும் ஆற்றல் எவருக்குத் தான் உண்டு?

கருணாநிதி பேச்சு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

விலை உயர்ந்து விட்டதே என்று காமராசரைக் கேட்டால் 'புளியஞ்செடி நடுங்கள்! புளி விலை குறையும்' என்கிறார். விலை ஏற்றம் எரிமலைபோல் குவிந்திருக்கிறது!

சுயராஜ்யம் பெற்று 12 ஆண்டுகளாகிவிட்டன, 1947-ம் ஆண்டிலே வெள்ளைக்காரன் மூட்டை முடிச்சுகளை கட்டிக்கொண்டு இந்த நாட்டைவிட்டு கப்பலேறிச் சென்றான். அப்போது அகில உலகத்திற்கெல்லாம் 'பாரதத்தை சுந்தர பூமியாக்கப் போகிறோம், பசி இல்லாமல் செய்யப் போகிறோம்' என்று அறிவித்து விட்டு ஆட்சி பீடமேறி 12 ஆண்டுகளாயிற்று!

இந்தியாவிலேயே தமிழகத்தில் உள்ள பட்டினி—பஞ்சம் போல் வேறெந்தப் பகுதியிலும் இல்லை.

இந்த நாட்டை ஆளவந்த ஒவ்வொரு மந்திரியும் பசிக்கு விதவிதமான தத்துவத்தை சொல்லிப் போகிறார்கள் எந்த மந்திரிக்கும் கிடைக்காத பட்டத்தை இவர்கள் பெற்றுக் கொண்டார்களே! ஆறு அவுன்ஸ் சர்க்கார் என்று!

பசி என்றால் ஒரு மந்திரி பிண்ணாக்கு சாப்பிடுங்கள் என்றார். ஒரு மந்திரி பருத்திக் கொட்டையைச் சாப்பிடச் சொன்னார்.

முன்ஷி என்று ஒரு மந்திரி இருந்தார், பசி பசி என்று துடித்தபாட்டாளி மகன், ஏழை விவசாயி முன்ஷியிடம் சென்று 'பசி' என்றான்.

'பசிக்கிறதா?'

'ஆமாம்!'

வழி சொல்லுகிறேன் அதன்படி செய். ஒரு சிறிய செடி ஒன்று கொண்டு வா.

செடி கொண்டு வந்தான் ஏழை; ஏதோ புதிய வழி சொல்லப் போகிறார் என்று.

'இதோ செடி!'

'கீழே நடு. தண்ணீர் ஊற்று போ'!

பசிக்கிறது என்றேன் செடி கொண்டுவரச்சொன்னீர்கள். இப்போதுபோகச் சொல்கிறீர்களே என்று கேட்டான் ஏழை மகன்.

போடா மூடா! உனக்குத் தெரியாது! நட்டிருக்கிறாயே செடி இது மரமாகும்—கிளைகள் வானுயர வளரும்.

கடலிலே உள்ள நீர், கதிரவனின் வெப்பத்தால் ஆவியாக மாறி மேகத்திலே கலக்கும். நீ நட்டாயே அந்த மரத்தின் குளிர் காற்று தொடும், மழை பொழியும், வாய்க்கால் வழியே ஓடி வயலுக்குப் பாயும். ஆறு—குளம் நிரம்பும்.

நிலத்தை இழுது சமப்படுத்தி விதை நட்டு நீர் பாய்ச்சு. நெல் விளையும். அறுவடை செய், உன் பசிநீங்கும், இதற்கு சுருக்கமான பெயர் என்ன தெரியுமா வனமகோத்சவம்! என்றார்.

பசி என்றால் ஏழையை வனமகோற்சவம் செய் என்கிறார். புதிய புதிய செடிகளை நடுங்கள் என்று உபதேசம் செய்து வருகிறார்கள்!

தினசரி, பத்திரிகையை புரட்டிப் பார்த்தால் எத்தனை தற்கொலைகள். வேலை இல்லாது அலைபவர்கள், வேலை கிடைத்தாலும், உழைப்புக்குத் தகுந்த ஊதியம் கிடைக்காதவர்கள், வறுமையின் கொடுமையால்— "இந்த நாட்டிலே உழைப்புக்கு தகுந்த ஊதியம்கிடைக்கவில்லை. அமைதிக்கு ஒரே ஒரு இடம். தண்டவாளம், சர்க்காரைவிட நல்ல மனம் கொண்டது. அது ஒன்றுதான் சாவுக்கு வழி காட்டுகிறது என்று தற்கொலை செய்து கொண்டவர்கள் ஏராளம்!

குடும்பத் தலைவனொருவன் வறுமையின் கொடுமையை அனுபவிக்க முடியாமல், மனைவி மக்கள் பசியால் துடிக்கும் காட்சியைக் காணச் சகியாமல், வாழ்ந்தென்ன இறந்தென்ன என்று நினைத்து மனைவியை கொலை செய்தான், மகனைக் கொன்றான், அவனும் தூக்குப் போட்டுக் கொள்ளப் போகும் சமயத்தில் அவனை போலீஸ் கைது செய்தது. இந்த வழக்கு நீதிபதி யிடத்திலே வந்தது. நீதிபதி அவனைப் பார்த்து, 'மனைவியை கொலை செய்தாயா?

'ஆமாம்!'

'உன் மகனைக் கொன்றாயா?'

'ஆமாம்! நான் பெற்ற ரத்தினத்தை தோள் மீதும், மடி மீதும் படுக்க வைத்து தாலாட்டிய மழலை செல்வத்தை நான் தான் கொன்றேன்!

அக்னி சாட்சியாக — அருந்ததி சாட்சியாக மாலையிட்டு மணந்த அருமை மனைவியைக் கொன்றதும் நான் தான்!'

'உன் மனைவியையும் குழந்தையையும் ஏன் கொன்றாய்?' நீதிபதியின் கேள்வி!

'பசியினாலே துடிதுடித்தார்கள். வறுமையிலே வாடினார்கள் பசி என்று துடித்துக் கதறும்போது அந்தக் கோரக்காட்சியை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. ஆகவே மனைவியைக் கொன்றேன் — மகனை கொன்றேன் — நானும் தற்கொலை செய்து கொள்ள முயன்றேன்,'

'மனைவியைக் கொன்றாய், மகனைக் கொன்றாய், நீயும் தற்கொலை செய்து கொள்ள முயன்றாய்—இது மாபெரும் குற்றம். உனக்கு மரண தண்டனை விதிக்கிறேன் போ!' என்று தீர்ப்புக் கூறினார் நீதிபதி.

சர்க்கார், சாவதற்கும் விடவில்லை. மக்கள் வாழ்வதற்கு வகையும் சொல்லவில்லை. பசி என்றால் மளிகைக்கடை வைக்கவேண்டுமா என்று கேட்கிறார் பக்தவத்சலம்!

இங்கே பேசிய அப்பன்ராஜும், மணலியும் சர்வ கட்சி தூதுக் குழு சார்பாகச் சென்று அமைச்சர் பக்தவச்சலத்தை கேட்டபோது அவர் திருப்திகரமான பதிலை அளிக்கவில்லை! இங்கே பதில் சொல்லாத பக்தவச்சலம் தஞ்சையிலே போய் 'நாங்கள் என்ன மளிகைக் கடையா வைத்திருக்கிறோம்' என்று பேசியிருக்கிறார். உள்ளபடியே இந்த வார்த்தையை சொல்லுகின்ற ஆணவம்—கொழுப்பு இந்த நாட்டு மந்திரிகளின் உடலிலே எவ்வளவு ஊறியிருக்க வேண்டும்?

மணலி பேசுகின்றபோது இந்த நாட்டு அமைச்சர்களுக்கு சரித்திரகால சம்பவங்களை எடுத்துக் கூறினார்! பிரான்ஸ் நாட்டிலே பௌலான் என்னும் கவர்னர் இருந்தான்!

நாட்டிலே பஞ்சம், பசி! மக்கள் பௌலானைக் கண்டு பசி, சாப்பாடு இல்லை என்று கேட்டனர்!

சாப்பிட்டால் பசி நீங்கும் என்றான் திமிரோடு!

சாப்பிடுவதற்கு என்ன இருக்கிறது என்று கேட்டனர் மக்கள்! அதோ பாருங்கள்! பச்சை பசேலென்று வளர்ந்திருக்கும் பசும்புல், அதைச்சாப்பிடுங்கள்! என்றான்! மக்கள் திரும்பினார்கள்! மக்களின் உள்ளம் எரிமலைகளாகின. புரட்சி புயல் எழுந்தது. பாட்டாளியின் பக்கம் வெற்றி வந்து குதித்தது!

பௌலான் மரண மேடையிலே நிறுத்தப்பட்டான், பௌலான் கழுத்திலே கத்தி விழும் சமயம், மாபெரும் மக்கள் மத்தியிலே இருந்த ஒருவன் 'நிறுத்துங்கள்' என்று கூவினான்! அங்கே இருந்தவர்கள் 'இவனுக்கா பரிவு காட்டுவது' என்றார்கள். நிறுத்துங்கள் என்று கூவியவன் ஓடோடிச் சென்று ஒரு கைப்பிடி புல்லை எடுத்து வந்து அவன் வாயிலே திணித்தான். பசி என்று கேட்டபோது புல்லைத் தின்னுங்கள் என்றாயே புல்லை சுவைத்துப் பார் என்றான். பௌலான் புல்லை தின்று கொண்டே இருக்கும்போது கழுத்திலே கத்தி விழுந்தது! அப்படிப்பட்ட துர்பாக்கியமான நிலைமை நமது அமைச்சர்களுக்கு ஏற்பட வேண்டாம்.

எனக்கு முன்னாலே பேசிய நண்பர் ஒருவர் பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்றார். பத்து என்றால் எண்ணிக்கையை அல்ல, அவர்கள்மீது வைத்திருக்கும் பற்று பறந்து விடும் என்பது!

ஒரு நாட்டின் வளத்திற்கு தேவை—உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்றும்தான்! சுதந்திரம் அடைந்து 12 ஆண்டுகளாகி விட்டன, உணவு தரப்படவில்லை, உடை இல்லை, உறையுள் வசதியாக இல்லை.

உணவு என்று கேட்டால் மாடு சாப்பிடும் பருத்திக் கொட்டையைக் காட்டுகிறாய்.

உடை இல்லையே என்று கேட்டால் மகாத்மா காந்தி முழந்துண்டுதான் கட்டிக்கொண்டிருந்தார்! மகாத்மாவை பின்பற்றுங்கள் என்கிறாய்.

உறையுள் — இடமென்றால் மயானத்தைக் காட்டுகிறாய்!

சாதாரணமான உணவுப் பிரச்னையை தீர்க்க முடியாத நீ, இந்த நாட்டை பன்னிரெண்டு ஆண்டு காலம் ஆண்டிருக்கிறாய்! இங்கே இருக்கின்ற எட்டு மந்திரிகளில் ஏழு பேருக்கு பிள்ளை குட்டிகள் உண்டு. ஒரு மந்திரி—முதன் மந்திரி ஹோட்டல் சாப்பாட்டுக்காரர்! குடும்பம் நடத்துகிற மற்ற மந்திரிகளுக்கே தெரியவில்லை! இதை தெரிவிக்கவே இங்கே சர்வ கட்சி கூட்டம் நடைபெறுகிறது!

சர்வ கட்சிகள் இணைந்து இருப்பதால் காமராசர் ஆட்சிக்கு குழி தோண்டி விடுவார்கள் என்று நினைத்தால், அது தவறான கருத்தாகும். அப்படி நடந்தாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை!

திராவிட முன்னேற்றக் கழகமோ, கம்யூனிஸ்ட் கட்சியோ அல்லது வேறு கட்சிகளோ இப்பிரச்னைக்கு மக்களை சதுரங்கக் காயாக்கிக் கொள்ளவில்லை.

இப் பிரச்னை முடிந்த பின்னர் மணலி அடுத்த மாதம் ஒரு கூட்டத்தில் பேசுகையில் கருணாநிதியை தாக்கிப்பேசலாம். நானும் ஒரு கூட்டத்தில் மணலியையும், கம்யூனிஸ்ட் கட்சியையும் தாக்கிப் பேசக்கூடும்.

நம்பிக்கையோடு உழைப்போம் என்ற உறுதி கொடுத்திருப்பதால் நாங்கள் ஒன்று சேர்ந்திருக்கிறோம். சர்வ கட்சியின் புனிதமான பணியை ஆளுகின்றவர்கள் உணர வேண்டும்.

"நாங்களும் ஆண்டு ஆண்டு தான் பார்க்கிறோம். உணவு விலை ஏறிக் கொண்டே போகிறது! இதற்குத்தானே நியாய விலைக் கடைகளை திறந்திருக்கிறோம்" என்கிறார்கள். மற்றவைகள் எல்லாம் அநியாய விலை கடைகளா? அநியாய விலை விற்பவர்களை ஏன் விட்டு வைத்திருக்கிறாய்?

வெள்ளைக்காரன் ஆண்ட காலத்தில் அரிசி விலை பத்தணா. புளி வீசை 5 அணா விற்றது. இப்போது புளி விலை, புலி விலையாக இருக்கிறது. ஒரு வீசை புளி மூன்று ரூபாய். அரிசி ஒரு படி, ஒரு ரூபாய் ஆறணா விற்கிறது. நான் இப்படி கூறுவதால் காங்கிரஸ்காரர்கள் "பார்! பார்! கருணாநிதி, வெள்ளைக்காரனே தேவலை என்கிறான்" என்று பேசுவார்கள். கம்யூனிஸ்டுகள்—சீனா, இந்திய எல்லை ஆக்கிரமிப்பை மறைப்பதற்காக இதிலே ஈடுபட்டிருக்கிறது என்கிறார்கள். மற்ற கட்சிகளுக்கு என்ன சொல்லுவது என்று காரணம் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

விலை ஏற்றத்தை குறைக்க சர்வ கட்சிகள் சொல்லக் கூடாது என்று மக்கள் நினைத்

(8-ம் பக்கம் பார்க்க)

சுடுகாட்டுச் சாம்பல்

பி. எஸ். இளங்கோ

அத்தியாயம்-23.

நாட்டிலே இயங்கி வரும் உண்மை சர்க்காருக்கு எதிராக ஒரு போட்டி சர்க்கார் ஏற்பட்டிருக்கின்றது என்ற செய்தி நாட்டையாளும் அமைச்சர்களின் காதுகளுக்கு எப்படியோ எட்டி விட்டது. போட்டி சர்க்காரின் ஒற்றர்கள் நாடெங்கிலும் நடமடுவதாகவும், அரசாங்க அலுவர்களிலும், வியாபாரஸ்தலங்களிலும், பாதுகாப்புப் படைகளிலும் அந்த ஒற்றர்கள் இருப்பதாகவும் அமைச்சர்களுக்கு அறைகுறையாக தெரிய வந்தது!

நாட்டிலே எங்கே புரட்சிப் புயல் உருவாகி விடுமோ, இந்த அரசாங்கத்தை கவிழ்த்து புதிய அரசாங்கத்தை ஏற்படுத்தி நாட்டை விடுவித்து விடுவார்களோ என்ற பயம் அமைச்சர்களுக்கு நிமிடத்திற்கு நிமிடம் அதிகரித்துக் கொண்டே வந்தது.

போலீஸ் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறந்தது! 24 மணி நேரத்திற்குள் போட்டி சர்க்கார் இயங்கும் இடத்தைக்கண்டு பிடிக்க வேண்டும் என்ற கடும் கட்டளையும் பிறப்பிக்கப்பட்டது!

எட்டு திசைகளிலும் போலீஸ் படைகள் பறந்தோடின! போலீஸ்பெரிய அதிகாரி அருமைநாயகம் பல போலீஸ் அதிகாரிகளுடன் அங்கும் இங்கும் ஜீப்பில் பறந்து கொண்டிருந்தார்! கதருவில் நடப்பவர்களை யெல்லாம் நிறுத்தி "யார் நீங்கள்? எங்கேசெல்லுகிறீர்கள்? எதற்கு செல்லுகிறீர்கள்? இந்த நள்ளிரவில் உங்களுக்கு என்னவேலை"? என்றெல்லாம் மிரட்டி அனுப்பிக் கொண்டே இருந்தார் அருமைநாயகம்!

எங்கிருந்தோ துப்பாக்கி சப்தங்கள் டுமீல், டுமீல், டுமீல் என்ற ஒலியை முழக்கிக் கொண்டிருந்தது! அருமைநாயகத்திற்கு ஒரு பக்கத்திலே திகிலும், மற்றொரு பக்கத்திலே மகிழ்ச்சியும் மாறி மாறி ஏற்பட்ட வண்ணம் இருந்தன! தன் அருமை மகள் வேல்விழிக்கு எங்கோ ஆபத்து வந்துவிடுமோ என்ற திகிலும், புரட்சிக்காரர்கள் சுட்டு வீழ்த்தப்பட்டு விட்டார்களோ என்ற மகிழ்ச்சியும் அருமைநாயகத்திற்கு ஏற்பட்ட வண்ணம் இருந்தன! மீண்டும் துப்பாக்கி சப்தம்! ஒரு முறையல்ல, இரு முறையல்ல! பல முறை கேட்டன! 'சிக்ஸ்எயிட் போர்! எடு வண்டியை" என்று கட்டளை யிட்டார்! சப்தம் வந்த திக்கை நோக்கி வண்டி வாயு வேகத்தையும் மிஞ்சி பறந்தோடிக் கொண்டிருந்தது! "ஐயோ அப்பா! ஐயோ அப்பா" என்ற சோகக் குரல் அருமை நாயகத்தின் காதில் வந்து ஒலிக்க ஆரம்பித்தது! உற்று கவனித்தார்! குரல் பெண்ணின் குரலாக இருந்தது! "ஐயோ வேல்விழி! நீ போய் விட்டாயா" என்ற வாய் விட்டே கத்தி விட்டார்! "ஜல்தி, ஜல்தி" என்று வண்டி ஓட்டிச் செல்லும்படி போலீஸ் டிரைவருக்கு கட்டளையிட்டார்! துப்பாக்கி பிரயோகம் நடந்த இடமும் வந்து விட்டது! அருமைநாயகம் வண்டியைவிட்டு இறங்கினுர்! போலீஸ் படையினரும், போலீஸ் அதிகாரிகளும் வரிசையாக நின்று அணிவகுத்து மரியாதையை செலுத்திக் கொண்டிருந்தார்கள்!

"என்னது?" அருமைநாயகம் கோபம் கொப்பளிக்கக் கேட்டார்!

இந்தப் பக்கத்தில் தான் போட்டி சர்க்கார் இருப்பதாகக் கூறினுர்கள்! எனவே வேட்டு சப்தங்களை கிளப்பினுல் பயந்து விடுவார்கள் என்று நினைத்தோம்! தெருவில் போய்க் கொண்டிருந்தவர்கள் மீது குண்டுகள் பாய்ந்து விட்டன! மன்னிக்கணும்!

"உயிர்ச் சேதம் ஒன்றுமில்லையே!" அருமைநாயகம் நெஞ்சம் பட படக்கக் கேட்டார்!

"நான்கு பெண்கள் உள்பட பத்துபேர் இறந்து விட்டனர்'' என்று அங்குள்ள அதிகாரி அறிவித்தார்!

"செத்தப் பிணங்கள்?" அருமைநாயகம் வாய்க்குளரக் கேட்டார்!

"ப்க்கத்தில் தான் போட்டு வைத்திருக்கிறோம்" என்று கூறி அருமைநாயகத்தை அழைத்து சென்றுர் ஒரு அதிகாரி! அருமைநாயகம் தள்ளாடி தள்ளாடிக் கொண்டே சென்றுர்! பிணங்களை யெல்லாம் பார்வை யிட்டார்! "வேல்விழி சாகவில்லை, என் வேல்விழி சாகவில்லை" என்று மனதிற்குள்ளேயே முணு முணுத்துக் கொண்டார்! அவருடைய உள்ளத்திலே மகிழ்ச்சியும், அதனுல் உதட்டிலே புன்னகையும் அரும்ப ஆரம்பித்தது! "ஆல்ரைட்" என்று சொல்லி விட்டு ஜீப் வண்டியில் ஏறினுர்!

அரசாங்கம் போட்ட கெடு முடிந்து அதிகமாகவே இரண்டு நாட்கள் ஓடி விட்டன! என்றுலும் போட்டி சர்க்காரை கண்டு பிடிக்க முடியவில்லை! புரட்சிக்காரர்களையும் கைது செய்ய முடியவில்லை!

போட்டி சர்க்காரை கண்டு பிடித்து ஒழிக்கும் பொறுப்பை இராணுவத்திடம் ஒப்புவிக்கப்பட்டது! இந்தப் பொறுப்பை லெப்டினெண்ட் கர்னல் தாமஸ் ஏற்றுக் கொண்டு இராணுவப் படையுடன் தென்னுட்டில் முகாம் செய்தார்! முகாம் செய்த முதல்நாளே ஊரடங்குச் சட்டத்தை அமலுக்குக் கொண்டு வந்தார், நான்கு பேர்களுககு மேல் கூடிப்பேசக் கூடாது! மாலை ஆறு மணிக்கு மேல் எவருமே வெளியில் வரக் கூடாது" என்று உத்திரவு பிரப்பித்தார்!

பாண்டியனுடைய புகைப் படத்தையும், வேல்விழியின் புகைப் படத்தையும் பத்திரிகைகளில் வெளியிட்டு "இந்தப் புரட்சிக்காரர்களைக் கண்டு பிடிப்பவர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் இனும் தரப்படும்" என்றும் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது.

"புரட்சிக்காரர்களைக் பதுக்கி வைத்திருந்தாலும், புரட்சிக்காரர்களுக்கு ஆதரவு தந்தாலும் அவாகளுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்படும்" என்றும் அறிவிககப்பட்டிநந்தது!

அத்தியாயம் 24

"கர்னல் தாமஸ்...! தாமஸ்! நீயா எங்கள் கொட்டத்தை அடக்கப் போகிருய்? உயிரையே பணயமாக வைத்து விடுதலைப் போரிலே குதித்த வீராதி வீரர்களை, அஞ்சா நெஞ்சம் படைத்த எஃகு உள்ளங்களை இதுவரையில் அடக்கியதாகவோ, ஒடுக்கியதாகவோ, அழித்ததாகவோ சரித்திரம் கூறவில்லை தாமஸ், சரித்திரம் கூறவில்லை! ஏதோ சில ஆயிரங்களை சம்பளமாகப் பெற்று, உன் பெண்டு பிள்ளைகளைக் காப்பாற்றிக்கொண்டு உன் காலத்தை கழிக்க வழி தேடிக் கொள்ளாமல் வேண்டாத வேலையில் ஈடுபட்டிருக்கிருய்! என்றைக்குமே விடுதலை வீரர்கள் ஒரு அணையாத நெருப்பு! அதிகார வர்க்கங்கள் விட்டில் பூச்சுகள்! இதை மறக்க வேண்டாம் தாமஸ், மறக்க வேண்டாம்!"

"நீ ஒரு தென்னுட்டான் என்பதால் இந்த அறிவுரையைக் கூறுகிறேன்! அதிகார போதையில் மயங்கி, ஆடாத ஆட்டங்களையெல்லாம் ஆடாதே! ஹிட்லருக்கு இருந்த வலிவும், நெஞ்சுர

மும் உனக்கு இருக்குமென்று நான் நினைக்கவில்லை! முஸோலினிக்கு இருந்த தைரியத்தில் பத்தில் ஒரு பங்காவது உனக்கு இருக்குமா என்பது சந்தேகமே! அவர்களே அழிந்து விட்டார்கள் என்றால் நீ எம்மாத்திரம்?''

அன்போடு நடந்து கொள்! பண்போடு நடந்து கொள்! தாயகத்தின்மீது பற்றும், பாசமும் இல்லாதவனை மனிதனாக எவனும் மதிக்க மாட்டான்!

நான் உனக்கு எச்சரிக்கை விடுவதாக எண்ணி ஆத்திரப்படாதே! இது எச்சரிக்கையல்ல —வேண்டுகோள்! அறிவுரைதான்!

இப்படிக்கு
பாண்டியன்
(போட்டி சர்க்கார் சார்பில்)

"அத்தான்! இந்த கடிதத்திற்கு என்ன அவசியம் அத்தான்!''

"அவசியமில்லாமல் எந்தக்காரியத்தையும் வேல்விழியின் கணவன் செய்யவேமாட்டான், வேல்விழி!''

"அத்தான்! எனக்கென்னமோ பயமாகத்தான் இருக்கிறது! அவர்கள் நினைத்தால் நாம் பொடிப் பொடியாகி விடுவோம்!''

"பைத்தியக்காரி! எதனால் அப்படி நினைக்கிறாய்? துப்பாக்கிகளையும், வெடி குண்டுகளையும் கண்டா?''

"அத்தான்! என்னதான் நாம் கொள்கையில் உறுதி படைத்தவர்களாக இருந்தாலும், நெஞ்சிலே உறம் கொண்டவர்களாக இருந்தாலும் இரக்கமற்ற அரக்க உள்ளம் படைத்தவர்களை மிஞ்சி விட முடியுமா?'' வேல்விழி திகிலோடு கூறினாள்!

"மிஞ்சி விட்டதாகத்தான் சரித்திரம் கூறுகிறது!''

"சரித்திரம்! சரித்திரம்!''

"என்ன வேல்விழி சலித்துக் கொள்ளுகிறாய்?''

"சலித்துக் கொள்ளவில்லை அத்தான்? சங்கடமான நிலையை விளக்கினேன்!''

"சங்கடமா?'' பாண்டியன் சிரித்துக்கொண்டே கேட்டான்!

"அத்தான்! வெள்ளம் வருமுன் அணை போடவேண்டும்! அதை மறந்து விடாதீர்கள்!''

"அப்படி யென்றால்?''

"நாம் எதையும், எப்படியும் வரும் ஆபத்தை சமாளிக்க வேண்டும்!''

"அதுதானே வேல்விழி! கவலைப்படாதே'' என்று கூறியபடி வேல்விழியை அழைத்துக் கொண்டு ஒரு இடத்தைக் காட்டினான்! வேல்விழியே பிரமித்து விட்டாள்!

"எனக்குக்கூடத் தெரியாமல்!''

"உனக்குத் தெரிந்தால் தடை சொல்லுவாயோ என்று நினைத்தேன்!''

"என் அத்தான் என்றால் அத்தான்தான்'' என்று சொல்லிக் கொண்டே பாண்டியன் மார்பில் சாய்ந்தாள்!

"இதைச் செய்த உன் அத்தானுக்கு என்ன பரிசாம்?''

"பரிசு உங்களுக்கல்ல, எனக்குத்தான்!''

"ஏனாம் வேல்விழி, ஏனாம்?''

"நான்தானே இதைக் கூறினேன்!''

"அப்படியானால் இருவருமே பரிசுகள் தரவேண்டுமல்லவா?''

"ஆமாம்! அதற்கு நான் எங்கே போவேன்!'' வேல்விழி கொஞ்சும் மொழியில் கூறினாள்.

"நான் தருகிற பரிசையே திருப்பித் தந்துவிடேன்.''

"ஓ, கொடுங்கள், அதைத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்.''

"நீ தர மாட்டாய்! அந்தப் பரிசைப் பார்த்தால் உனக்குத் திருப்பித் தர மனசே வராது.''

"அப்படியென்ன அது உலகத்தில் எங்குமே கிடைக்காதப் பொருளா?''

"ஆமாம் வேல்விழி, ஆமாம், உலகத்தில் நிச்சயமாக எங்குமே கிடைக்காது.''

"எங்கே, கொடுங்கள் அதைப் பார்க்கலாம்!'' என்று இரண்டு கைகளையும் நீட்டினாள் வேல்விழி.

"கையில் கொடுக்கும் பொருளா அது?''

"போங்களத்தான்! யாராவது பார்த்து விட்டால்?

"காயம் பட்ட கன்னத்தை மறைத்துக் கொள்ளேன்.''

"சரி சரி! நேரமாகிவிட்டது புறப்படுங்கள்!''

"தந்த பரிசைத் திருப்பித் தந்துவிடு!''

"போங்கள்! பெரிய பரிசைத் தந்து விட்டீர்கள்! அதைத் திருப்பி வேறு தரவேண்டுமா?''

"அந்த சின்னப் பரிசைத்தான் நீ ஏன் வைத்துக்கொண்டிருக்கிறாய்?''

"சரி, சரி!''

"என்ன சரி, சரி!''

"தருகிறேன் போங்க!''

"எப்போவாம்?''

"பிறகு வாங்க, தருகிறேன்!''

"பிறகு என்றால்...?''

"பிறகு என்றால் பிறகுதான்? இதற்கு வேறு அர்த்தம் சொல்ல வேண்டுமோ?''

"புரியுது, புரியுது! ராத்திரிக்கு ...அப்படித்தானே!''

பாண்டியனும் வேல்விழியும் மகிழ்ச்சி உலகத்திலிருந்து சிந்தனை உலகத்திற்கு குடி புக ஆரம்பித்தார்கள்!

எதை எதையோ யோசித்து விட்டு வெளியில் சென்று வருகிறேன் என்று வேல்விழியிடம் பாண்டியன் கூறினான்!

"வேண்டாம்'' என்று வேல்விழி தடுத்தாள்! நிலைமையை அறிந்து வந்தால்தான் அதற்கேற்ப பணிபுரிய முடியும் என்று கூறிவிட்டு பாண்டியன் இராணுவ உடைகளை அணிந்து கொண்டு புறப்பட்டான்! வேல்விழிக்கு மனம் தாளவில்லை! அவளும் இராணுவ உடைகளை அணிந்து கொண்டு பாண்டியனைத் தொடர்ந்து செல்லத் தொடங்கினாள்!

[தொடரும்]

மதுரை மாவட்ட
திராவிடர் மாணவர் முன்னேற்றக் கழக
முதல் மாநாடு

மதுரை விக்டோரியா எட்வர்டு ஹாலில்

29—11—59 ஞாயிறு காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் நடைபெறும்.

தலைவர்	திறப்பாளர்
கே. ஏ. கிருட்டிணசாமி B. A. (Hons).	பி. எஸ். மணியம் B. A. (B. L.)

மாநாட்டில் மாணவப் பொதுச்செயலாளர்

எஸ். டி. சோமசுந்தரம் (B. E.) அவர்களும்

மற்றும்

டி. கே. பொன்னுவேலு B. A (B, L.), சு. ஆறுமுகம் B. A. (B. L.), கோவை செழியன் B.A., ப. நெடுமாறன் B. A. (Hons), பி. இராசமாணிக்கம் B.A. (B L,), பூவை. இராமானுசம் B. com, (Hons), சி. என். ஏ. பரிமளம் மோகன்தாஸ் (M,B.B.S.), தி. அழகிரிசாமி B.A. (Hons) உ. பில்லப்பன் M. A., பி. பாலசுப்பிரமணியம் B. E., கிருட்டிணன் (B. Sc,) டி. கோபாலகிருட்டிணன் B. A. என்.வி,என். சோமு (B.A.), சீர்காழி சோமசுந்தரம் B.A. சா. பெ. மலைச்சாமி (B.A. Hons), ஆ. ராசகுமார் பீட்டர், சற்குணம், ஜே. என். இராசு, அ, இளங்கோவன், எஸ். ஆர், பாலசுப்பிரமணியன் B.A. (Hons), எம். குப்புசாமி, கெ. எஸ், சம்பத்து B. E. வே, சௌந்திரராசன் B. A. (B. L.), தங்கபாண்டியன் B. A., மைனர் மோசஸ் B A., மா, பாண்டியன், வெற்றிச்செழியன், இளமாறன், (M A.), வெற்றிச் செல்வன் (B.A.), இளம்வழுதி B.A. (B.E,), அ. பாலு (B.A.), மாறவேள், தவசி.

சொற்பொழிவாற்றுவார்கள்!

சொ. வெற்றிவேந்தன் தமிழ்ச் செல்வன் சாமி இராசேந்திரன் (செயலாளர்கள்)	புகழ்மணி (பொருளாளர்)	கு. இந்திரசித்து (வ. கு. தலைவர்)

<u>புத்தக விமர்சனம்</u>

சுதந்திரமும், முன்னேற்றமும்!

(முதலமைச்சர் கனம் காமராசரின் சொற்பொழிவுத் தொகுப்பு)

விலை 1-50.

கிடைக்குமிடம்:—
பாரி நிலையம்
பிராட்வே சென்னை-1.

வெளியிட்டோர்:—
மனோன்மணி பதிப்பகம்
சென்னை

சென்னை முதலமைச்சர் கனம் காமராசரின் பேச்சுக்கள் பலவற்றைத் தொகுத்து "சுதந்திரமும், முன்னேற்றமும்'' என்ற பெயரில் அதை நூல் வடிவாக்கித் தந்திருக்கிறார்கள் மனோன்மணி பதிப்பகத்தினர்.

முதலமைச்சர் கனம் காமராஜர் எதிர்க் கட்சிகளைப் பற்றி என்ன நினைக்கிறார் என்பதைத் திட்டவட்டமாக காங்கிரஸ்காரர்கள் அறிந்து கொள்ளவும்—திராவிட முன்னேற்றக் கழகத்தினரும், சுதந்திரா கட்சியினரும் காமராஜரைப் பற்றிப் புரிந்து கொள்ளவும் இந்த நூல் வெகுவாகப் பயன்படும்!

திராவிட முன்னேற்றக் கழகத்தினரும், சுதந்திரா கட்சியினரும் காமராஜரின் இந்தப் பேச்சுகளை வைத்துக் கொண்டு, காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளையும், சர்க்காரின் திட்டங்களையும் எடுத்துச் சொல்லி தங்கள் தங்கள் கட்சிக்கு நல்லாதரவைத் தேடிக் கொள்ளவும் இந்த நூல் சிறப்பாக பயன்படும்! அதே போல் காங்கிரஸ் கட்சியினரும் எதிர்கட்சிகளைத் தாக்க இந்த நூலைப் பயன்படுத்திக் கொள்ளலாம்! ஆகவே இந்நூலை அனைவருக்கும் பயன்படும் நூல் என்றே சொல்ல வேண்டும்.

இந்நூலை சிறந்த முறையில் தொகுத்து வெளியிட்டிருக்கும் திரு மு. நமசிவாயத்திற்கு சர்வகட்சியினரும் கடமைப்பட்டிருக்கிறார்கள்!

சென்னைக்கு தி. மு. க. மேயர் ஊர்ஜிதம்!

இங்கே 52 ! அங்கே 48க்கும் சந்தேகம் !

எதை நம்பி காங்கிரஸ் போட்டியிட நினைக்கிறது ?

பணத்தால் அடிபட்டு வீழ்பவர்கள் இங்கே யாருமில்லை!

கருத்தோடு பணிபுரியுங்கள்--களங்கத்தை அகற்றுங்கள் ! ஜனநாயகத்தை காத்திடுங்கள் !

இம் மாதம் 30-ம் தேதி சென்னை நகர சபைக்கு மேயர் தேர்தல் நடைபெற இருக்கிறது! நகரசபையில் உள்ள மிக மைனாரிட்டி கட்சியான காங்கிரஸ் கட்சி எப்படியும் மேயர் பதவியைப் பிடித்து விட வேண்டும் என்ற நோக்கத்தோடு திட்டம் போட்டு வேலை செய்து வருகிறது!

இலட்சம் போனாலும் சரி "எங்கள் இலட்சியம் மேயர் பதவியே" என்ற தத்துவத்தை கடைப்பிடிக்க காங்கிரஸ்கட்சி முனைந்து நிற்பதாக அரசியல் வட்டாரத்திலிருந்து செய்திகள் அடிபட்ட வண்ணம் இருக்கின்றன! நேரத்திற்கு நேரம், வினாடிக்குவினாடி மார்க்கெட்டின் நிலவரம் அதிகமாகிக் கொண்டே போவதாகவும்—இதற்குக் காரணம்விலைவாசி ஏற்றமும்ஒருகாரணம் என்று சொல்லப்படுகிறது!

இதற்கிடையில் காங்கிரஸ்கட்சியிலேயே ஒரு பெரும் பிளவு ஏற்பட்டு "யாருக்கு தகுதி இருக்கிறது?" என்ற சர்ச்சை எழுந்ததாகவும்-பணம் படைத்தவர்களுக்கே அந்தத் தகுதி உண்டென்று பதில் வந்ததாகவும் கூறப்படுகிறது! "பணத்தை மட்டும் நம்பி என்ன செய்ய முடியும்" என்று சிலர் கேட்டதாகவும்—"பணத்தால் எதையும் செய்யலாம்" என்று கூறி பல வெற்றிகளை அதற்கு சான்றுகளாக எடுத்து வைத்ததாகவும் கூறப்படுகிறது! காங்கிரஸ் கட்சியிலே உள்ள முன்வார் உசேனா? அல்லது சுல்தான் மொய்தீனா? அல்லது ரகீமா? என்ற குழப்ப நிலையெல்லாம் ஒருவாராக சமாளிக்கப்பட்டு பெரும் பணம் படைத்த திரு.சுல்தான் மொய்தீனையே நிறுத்துவது என்ற முடிவுக்கு காங்கிரஸ் கட்சி வந்திருப்பதாகவும் பேசிக் கொள்ளப்படுகிறது!

இந்த செய்திகளெல்லாம் உண்மையோ, பொய்யோ நிச்சயமாகத் தெரியாது! ஆனால் ஜனநாயகத்தைப் படுகொலை செய்துவிட்டு பணத்தால் பதவியைப்பெற காங்கிரஸ் துடிதுடிக்கிறது என்பது மட்டும் மிக விளக்கமாகத் தெரிய வருகிறது! இல்லை என்றால் 37 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கட்சி தைரியத்தோடும், துணிவோடும். கொஞ்சமும் மானத்திற்கு அஞ்சாமலும் போட்டியிட முன் வருமா? எந்த தைரியத்தைக் கொண்டு காங்கிரஸ்கட்சிமேயர் தேர்தலில் போட்டியிட முன் வருகிறது ? எந்த வலிவைக் கொண்டு காங்கிரஸ்கட்சிமேயர் பதவியைப் பிடிக்க ஆசைப்படுகிறது!

தாங்களோ மைனாரிட்டி! போட்டியிடுவதோ மேயர் தேர்தலுக்கு! விசித்திரமாக இல்லை இது? காங்கிரஸ் கட்சிக்கு நேர்மை இருக்குமானால், நாணயமிருக்குமானால், ஒழுக்கம் இருக்குமானால் ஜனநாயகத்தில் நம்பிக்கை இருக்குமானால் நிச்சயமாக மேயர் தேர்தலுக்கு போட்டியிட முன் வரவே வராது! அப்படி வருகிறது என்றால் இவைகளில் ஒன்று கூட அதற்கு நம்பிக்கை இல்லை என்று கருதுவதாகத் தான் நாம் நினைக்க வேண்டி இருக்கிறது!

தி மு. க.	46
காங்கிரஸ்	37
கதம்பம்	11
கம்யூனிஸ்டு	6

இதில் கதம்பப் பட்டியில் சேர்ந்தவர்களில் இவர் காங்கிரஸ் டிக்கட் கிடைக்காமல் காங்கிரஸ் கட்சியையே எதிர்த்து—அதாவது தன் தாய்க் கட்சிக்கே துரோகம் செய்துவிட்டு வந்தவர்களாவார்கள்! எனவே கதம்பங்களில் பலரை எப்படியோ இழுத்துக் கொள்ள முடியும்!

ஆனால்! ஆனால்!! ஆனால்!!!

கொள்கைக்காகவே காலமெல்லாம் கஷ்டப்பட்டு, உற்றார் பெற்றோர்கள் என்ற பாசத்தையும்—சில பல நேரங்களிலே மறந்து—"தன் இனம், தன் நாடு, தன் மொழி" என்ற பாசத்தோடு ஊருக்கு உழைத்துவரும் எங்கள் கொள்கை வீரர்களில் ஒருவரைக் கூட உன்னால் அசைக்க முடியாது, ஆட்ட முடியாது! எங்களில் யாரும் பணத்தை நம்பி வாழவில்லை! பணத்தை நம்பி வாழவும் முடியாது!

ஒரு பத்தாயிரமோ, ஒரு பதினைந்தாயிரமோ கிடைத்தால், மாடி வீடு அமைத்து உல்லாசமாக வாழத்தான் முடியும்! மறுநாள் காலையில், பொழுது விடிந்தவுடன் மக்கள் முகத்தில் விழிக்க முடியாது! பொது வாழ்வை மறந்துவிட வேண்டும்! அவனுடைய வாழ்வு ஒரு பத்தாயிரத்தோடு முடிந்து விடும்! எனவே மனிதன் மனதாலும் நினைக்கக்கூடாத இந்த காரியத்தை எவனும் செய்யமாட்டான்! எங்களில் யாரும் செய்ய மாட்டோம்! இதுவரையில் காங்கிரஸ்காரர்களுக்கு இந்த நப்பாசை இருந்திருந்தால், இந்தச் சபலம் தட்டியிருந்தால் அடுத்த கணமே அதை மறந்து விடுங்கள், மறந்து விடுங்கள்!

அடுத்தபடியாக உள்ள கம்யூனிஸ்டு நண்பர்கள் அனைவரும் பணத்தை நம்பி வாழ்பவர்கள் அல்ல! ஏழைகள்தான் அவர்களுக்குத் தோழர்கள்! எளியவர்கள்தான் அவர்களுக்கு நண்பர்கள்! எனவே இதற்கெல்லாம் வைரியாக உள்ள காங்கிரஸ் கட்சியை அவர்கள் ஆதரிப்பார்கள் என்று எதிர்பாப்பது பாலைவனத்தில் பசுஞ்சோலையைக் காண நினைப்பதற்கு ஒப்பாகும்!

எனவே 46 உறுப்பினர்களைக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகமும், ஆறு பேர்களைக் கொண்ட கம்யூனிஸ்டு கட்சியும் ஒரே அணியில நிற்கும்! அப்படி ஒரே அணியில் நிற்கும்போது, காங்கிரஸ் கட்சிக்கு எதிராக 52 பேர்கள் இருப்பார்கள் ! 52 பேர்கள் இருக்கிறார்கள் என்றால் சென்னைக்கு தி. மு. க. மேயர் ஊர்ஜிதமாகி விட்டது என்று பொருள், தி. மு கழக உறுப்பினரான அப்துல்காதர் வெற்றி பெற்று விட்டார் என்று அர்த்தம்!

இந்த நிலையில் காங்கிரஸ்காரர்கள் தேர்தலுக்கு நிற்பதும், விலை பேச எண்ணுவதையும் நினைத்தால் நமக்கு சிரிப்புத்தான் வருகிறது! பதவி ஆசை பொல்லாதது! எனவே அவர்கள் மீது குற்றம் சொல்லி பயனில்லை! பார்க்கட்டும்! முடிந்த வரையில் பார்க்கட்டும்! வெற்றி, பணநாதனுக்கா? கொள்கை வீரனுக்கா? என்பதையும் பார்த்து விடுவோம்!

என்றாலும் நாம் மிக்க கவனத்தோடும், மிகமிக உன்னிப்பாகவும் பணிபுரிய வேண்டும் என்பதை நமது கழகத் தோழர்களுக்கும், கம்யூனிஸ்டு நண்பர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்!

கருணாநிதி பேச்சு

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தால் அது ஆட்சிக்கு ஆபத்து. விலை ஏற்றத்தை எத்தனை நாளைக்கு பொறுத்துக் கொண்டிருப்பார்கள்?

சட்ட சபையிலே அண்ணா அவர்கள் பேசுகையில் "ஏழை" ஒரு கவளம் சாப்பாட்டை வாயருகே எடுத்துச் செல்லும்போது இந்த மந்திரி சபையை வாழ்த்திவிட்டு சாப்பிட்டால்தான், இந்த ஆட்சி வாழும், நிலைக்கும்" என்றார்.

இங்கே ஒருகவளம் சோற்றை வாயருகே கொண்டு போகும் போது நாற்றம் மூக்கைத்துளைக்கிறது—'பாவிகளா, பகவான் உங்களுக்கு படி அளப்பான்' என்று கூறிவிட்டு விழுங்கவில்லை —தூர எறிகிறான்! வாழ்வீர்களா என்று சபிக்கிறான். மக்கள் குரல் தான் மகேசன் குரல் என்பதுபோல், ஆட்சியாளர்கள் மக்கள் குரலை மதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

ஏழை சம்பாதிக்கும் குறைந்த ஊதியத்தால் பசியை போக்கிக் கொள்ளமுடியவில்லை. பசியோடு இருப்பவனை புரட்சிக்கு யாரும் தூண்டிவிட வேண்டிய அவசியமில்லை. பொறுங்கள் என்றால் கூட ஏழை துள்ளியெழுவான், ஏழை போர் வீரனாக 'காட்சி அளிப்பானாகில் இங்கே இருக்கின்ற போலீஸ் ஒன்றுமே செய்ய முடியாது! காமராஜர் வைத்திருக்கிற ரதகஜதுரகபதாதி படைகள் எதுவும் செய்ய முடியாது. எப்படியும் சாகத்தான் போகிறோம் இன்றே சாவோம் என்று நினைத்தால்

கைகளே துப்பாக்கிகளாகும். பெருமூச்சே கண்ணீர்ப் புகையாய், ஒழிக ஒழிக என்ற உணர்ச்சி முழக்கமே வெடிகுண்டுகளாகி விடும். கோட்டை தூள்தூளாகும். ஏழை துணிந்தால் எந்தக் கட்சியும் அணை போட்டு நிறுத்த முடியாது.

பொது மக்களே! நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று கூறி யிருக்கிறோம். நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள்! ஒன்றாக இணைந்திருப்பது உங்கள் உயிர் உடமைகளை பாதுகாப்பதற்காக! சர்வ கட்சி வேண்டாம் கலைத்து விடுங்கள் என்றால், பொது மக்களின் ஆத்திரத்திற்கு நீங்கள் ஆளாவீர்கள் என்பது உறுதி!

எப்போதும் அரசியலில் மூன்று விதிகள் உண்டு. முதலிலே வேண்டுகோள், இரண்டாவது எச்சரிக்கை. மூன்றாவதாக இருப்பது கேள்விக்குறி. அந்தக் கேள்விக் குறி, அபாய அறிவிப்பாகக் கூட மாறி விடலாம், இதை, இந்த நாட்டை ஆள்கின்றவர்கள் உணரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

காமராசர் மட்டும் டில்லிக்கு அடிக்கடி காவடி தூக்குவது ஏன்?

எந்தக் காலத்திலும் தமிழர்கள் வடவருக்கு கட்டுப்பட்டு வாழ்ந்ததில்லை!

கண்ணதாசன் பேச்சு

(12-பக்கத் தொடர்ச்சி)

தெற்கு வாழ. எந்த மன்னனும் வடக்கு நோக்கி போகவில்லை. ராஜராஜ சோழன் டில்லிக்கு காவடி எடுக்கவில்லை, காமராசர் காலத்தில் மட்டும்டில்லிக்கு காவடி எடுத்துக்கொண்டு அடிக்கடிபோகிறார்கள் அமைச்சர்கள்.

நாம் மேடையிலே சொல்வதெல்லாம் நேருவே கொடுத்துவிடு. இல்லையென்றால் எடுத்துக் கொள்வோம்! நாம் திராவிட நாடு கேட்பது—குரானில் இல்லாத பாக்கிஸ்தானை ஜின்னா கேட்டது போல், இலக்கியத்தில் இல்லாத திராவிட நாட்டைக் கேட்கிறோம் என்று நினைக்கிறார்கள்,

அயர்ந்து தூங்குகிறான் என்றால் அவனை கூட எழுப்பி விடலாம் ஆனால் தூங்குவது போன்று பாசாங்கு செய்யும் ம. பொ. சி. போன்றவர்களை எப்படி எழுப்ப முடியும்?

நமக்கும், வடவருக்கும் உள்ள மொழி ஒற்றுமையை—உணவு உடை, நாகரீகம் அத்தனைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமையை பண்டித நேருவுக்கு பல முறை சொல்லியாகி விட்டது! காமராசருக்கும் நேருவுக்கும் புரிகிறதா, இல்லையா என்று நமக்கு புரியவில்லை!

காமராசருக்கு சுட்டுப் போட்டால் கூட இந்தி தெரியாது—நேருவுக்கு சுட்டுப் போட்டால் கூட தமிழ்புரியாது!

தியாகராய நகரிலே ஒருவாலிபனை போலீசார் கைது செய்து போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றனர்! அவனுக்கு சம்பந்தமில்லாதவர்களெல்லாம் போலீஸ் ஸ்டேஷனுக்கு படையெடுத்து விட்டனர்! காரணம் என்ன? அவன் தமிழன் தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும்!

பத்ராவதியிலே வேலை செய்கின்ற தொழிலாளிகளுக்கு கூலி ரூ 1 50, வடக்கே உள்ள துர்காபூரில் வேலை செய்யும் தொழிலாளிக்கு ரூ 5-50. அங்கே வேலை செயகின்றவதும் கரியைத் தான் தள்ளுகிறான். துர்காபூரியிலே வேலை செய்கின்றவனும் கரியைத் தான் தள்ளுகின்றான்.

பதிராவதியிலே செய்யப்படும் இரும்புக்கு நல்ல கிராக்கி இருக்கிறது! அங்கே வேலை செய்யும் இடத்திலே இடத்திலே 2500 வால்ட் மின்சாரம் எப்போதும் பாய்ந்து கொண்டே இருக்கிறது.

இங்கே மூன்று ஷிப்ட் வேலை செய்கிறார்கள். நெருப்பு இந்த இடத்திலே மின்சாரத்தின் மூலம்வருகிறது! சாதாரணமாக இங்கே பார்ப்போமானால் 440 வால்ட் என்றால் அதன் போர்டுக்கு பக்கத்தில் 'டேஞ்சர்' அபாயம் என்று எழுதி வைக்கிறார்கள்.

பத்ராவதியில் கால் வைக்கும் இடத்தில் 2500 வால்ட் மின்சாரம் பாய்ந்து கொண்டே இருக்கிறது. நீட்டமான மண் வெட்டியினால் இரும்புத் துண்டை வீசினால் நெருப்பு குப்பென்று பற்றுகிறது. தொட்டால் இரண்டு நிமிடத்தில் உடம்பு கருகிவிடும்.

இங்கே 7000 பேர் வேலை பார்க்கிறார்கள், ஆண்டுக்கு 80 டன் இரும்பு உற்பத்தி செய்கிறார்கள், துர்காபூரில் 700 டன் இரும்பு கிடைக்கிறது, துர்காபூரில் இருக்கும் பிலாய்; ரூர்கேலா உருக்கு தொழிற்சாலையில் ஒன்னறை லட்சம் பேர் வேலை செய்கிறார்கள். பத்ராவதியிலே வேலை பார்க்கும் தொழிலாளிக்கு ஒரு நீதியும், துர்காபூரிலே வேலை செய்யும் தொழிலாளிக்கு ஒரு நீதியும் கூடாது, வடக்கு அநீதி செய்கிறது என்று நாம் கூறி வருகிறோம். வடக்கு, தெற்கிற்கு அநீதி இழைக்கின்ற சூழ்நிலை மாற வேண்டும்.

நாம் முன்பு தனித்து வாழ்ந்தோம். மீண்டும் நாம் எல்லா வளத்தோடு வாழ வேண்டும். நமதுநாட்டிலே மூன்றால் பேசிய மொழி நான்கு 'ஹை' போடுகின்ற இந்தி மொழி நமக்கு வேண்டியதில்லை! நமக்கு வேண்டியது தமிழ், தெலுங்கு. கன்னடம், மலையாளம் இணைந்த திராவிடக் கூட்டாட்சி.

வடநாட்டவருக்கும் நமக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. வடநாட்டில் மரம் கூட வேறு. அங்கிருக்கும் மரங்களும் அவர்களைப் போலவே தூங்கி வழிந்துக் கொண்டிருக்கும்.

இலங்கையிலே தகநாயகாவுக்கு இருக்கின்ற மதிப்பு இங்கே இருக்கின்ற காமராஜருக்கு இல்லை.

வடநாடு வண்டி என்றால் அதிலே பூட்டப்பட்ட மாடு தென்னாடு, அங்கே இருந்தவரும் உத்திரவுகளுக்கு கொஞ்சமும் பதில் சொல்லாமல் இழுத்துச் செல்கிறார்கள்.

நமக்கு எந்த விதத்திலும் பகை இல்லை. மூன்று பக்கமும் கடல். வடக்கே தான் எல்லை தெரியவேண்டும். நமக்குப் பகைவன் என்றால் வடநாட்டிலே இருந்து தான் வரவேண்டும். மூன்று பக்கமும் கடல் சூழ்ந்திருக்கிறது. இரு பெண்கள் நெளிந்து நடனமாடுவது போல எல்லை இருக்கிறது, 32000 வருடம் கொடி கட்டி வாழ்ந்தான் அப்போது அவன் எந்த நேருவுக்கு கொட்டிக் கொடுத்தான்?

எகிப்திலே பத்து வெள்ளைக்காரர்களை பிடித்து வைத்திருக்கிறார்கள் என்பதற்காக 100 பிரிட்டிஷ் விமானங்கள் எகிப்து மீது பறந்தன, ஐ. நா. சபையில் கேள்வி கேட்கப்பட்ட போது எங்கள் நாட்டவரை காப்பாற்றுவதற்காக என்றான் பிரிட்டிஷ்காரன்.

இலங்கையிலே தமிழர்கள் வாடுகிறார்கள்—கொடுமைக்குள்ளாகி யிருக்கிறார்கள், நேரு ஏன் என்று கேட்கவில்லை பர்மா, தங்கநிகா என்ற பகுதியில் தமிழர்கள் கூலிகளாய் வாழுகிறார்கள், உலகத்தில் கூலி வேலை செய்து பிழைக்கின்ற பாழாய் போன தமிழர் சமுதாயத்தை போன்று ஒரு சமுதாயமும் இல்லை.

நேரு அவர்களுக்கு ஆறுதல் கூறினாரா? நேரு வேறு—நாம் வேறு. ஆறுதல் கூற வேண்டியவர் காமராஜர்! நேரு அல்ல!

இலங்கையிலே தமிழர்கள் கலவரத்தில் 1200 பேர் இறந்தார்களாமே என்று தமிழர்கள் சார்பில் கேட்கப்பட்டபோது பண்டாரநாயகா அப்போது தலைகுனிந்து ஏற்றார்!

இலங்கையிலே 6 பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள், தமிழ் நாட்டிலே இருந்த காமராஜர் கண்ணீர் விடவில்லை. ஒரு அனுதாபச் செய்தி கூட அனுப்பவில்லை.

இங்கே ஆட்சியிலே இருக்கிறவர்களுக்கு கொஞ்சம் கூட உணர்ச்சி இல்லையே! உடலிலே ஓடுவது ரத்தமா, சாக்கடை நீரா?

மலேயா, சிங்கப்பூரில் காரணமில்லாமல் சம்பத்துக்கு தடை விதித்தார்கள். வார்த்தைகளை அளந்து பேசுவதில் அண்ணாவுக்கு அடுத்தபடி சம்பத் தான்!

இங்கே இருப்பவனை ஒழித்து, அங்கே உள் தமிழர்களை நாம் அழைத்துக் கொண்டால் தான் தமிழர்களின் மானம் நிலைக்கும்.

திராவிட நாடு தனி நாடாக வேண்டும். திராவிடம் பிரிந்தால் தான் நமது வாழ்வு வளம் பெறும். அதற்கான முயற்சிகளிலே நாம் ஈடுபட வேண்டுமென்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்,

---

யார் இந்த ராஜாஜி?

சக்ரவர்த்தி திரு. ராஜகோபாலாச்சாரியாரைப் பற்றி இப்போதுள்ள காங்கிரஸ்காரர்களில் சிலரும், அப்போதுள்ள காங்கிரஸ்காரர்களில் பலரும்—"யார் இந்த ராஜாஜி?" என்ற வினவை எழுப்பி கண்டனக் கணைகளைத் தொகுத்து வருகின்றார்கள்!

ராஜாஜி காந்தியாரின் சம்பந்தி! முன்னாள் கவர்னர் ஜெனரல்! முன்னாள் சென்னை முதல் அமைச்சர்! காங்கிரஸ் தியாகி! சிறையில் வாடியவர், அங்கே சித்திரவதை பட்டவர்! இந்தியாவின் சுதந்திரத்திற்காக அரும் பாடு பட்டவர், எங்கள் வைரி என்பதை புரியாத காங்கிரஸ்காரர்களுக்கு புரிய வைக்க விரும்புகிறோம்!

அந்த ராஜாஜி தான் இன்று உங்கள் வைரியாக மாறி இருக்கிறார்! காரணமென்ன? ஏன் விலகினார்? ஏன் இன்று உங்களைத் தூற்றுகிறார்?

ஆச்சாரியாருக்கு நாங்கள் வக்காலத்து வாங்க வரவில்லை! ஆச்சாரியார் அன்றும், இன்றும் எங்களுக்கு வைரி தான்! பிரிவினையை எதிர்ப்பவர் தான்! ஆனால் உங்கள் ஆச்சாரியார் உங்களையே தூற்றக் காரணமென்ன?

"பதவி பறி போய்விட்டதால் தூற்றுகிறார்" என்பீர்கள்! அப்படியானால் பதவி பித்தர்கள் தான் உங்கள் கட்சியில் இருக்கிறார்களா? அப்படியானால் இனி பதவியை பறி கொடுக்கப் போகும் பலரும் உங்களுக்கு வைரியாக மாறுவார்களல்லவா?

இன்று ஆச்சாரியார் சுதந்திரா கட்சியை ஆரம்பித்துள்ளார்!

பதவி பறி போனால் நாளை, காமராஜர் என்ன கட்சி ஆரம்பிப்பார்! அது அடிமை கட்சியாக இருந்தாலும் இருக்கலாமல்லவா?

அதற்கடுத்தாற் போல் சுப்பிரமணியம் "பதவி வெறியர்கள்" என்று தன் கட்சிக்கு பெயர் சூட்டினாலும் சூட்டலாம் அல்லவா?

இன்று ஆச்சாரியாரை "யார் இந்த ராஜாஜி" என்று கேட்கிறீர்கள்!

நாளை, காமராஜரை "யார் இந்த காமராஜர்" என்பீர்கள்!

அதற்கு மறுநாள்—"யார் இந்த சுப்பிரமணியம்" என்பீர்கள்!

அதற்கு மறுநாள் நேரு பெருமகனாரையே பார்த்து "யார் இந்த நேரு" என்பீர்கள்!

வாழ்க உங்களது இலட்சியம்!
வளர்க உங்களது பதவி வெறி!
வீழ்க உங்களது ஆட்சி!
வெல்க எங்களது திராவிடம்!

தனியட்சி பெற்றால் தான் - அந்தந்த நாட்டுக் கேற்றபடி நல்வாழ்வு பெறமுடியும்!

திராவிட முன்னேற்றக் கழகம் திராவிட நாடு கேட்பது அற்பஆசைகளுக்காகவோ, ஓட்டு வேட்டைக்காகவோ அல்ல!

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

வதா என்றால் விபூதி அணிந்திருந்தாலும் நீங்கள் ஒரு கண்ணிலே செட்டியாரையும், ஒரு கண்ணிலே முள்ளையும் பார்க்க வேண்டும். எனவே பூகோளத்தில் இருக்கிறது என்பதைக்கூட விட்டு விடுங்கள். காங்கிரஸ்காரர்களின் தலைவர் எழுதிய புத்தகத்தை எடுத்துப் பாருங்கள். இந்தியா ஒரு நாடல்ல என்று எழுதியிருககிறார். பண்டித நேரு தன்னுடைய மகள் இந்திராவுக்கு எழுதியிருக்கிறார்.

“நாம் வாழும் நாட்டிற்கு ‘ஆரிய வர்த்தம்’ என்று பெயர். தெற்கே இருக்கும் நாடு ‘திராவிட நாடு’ இப்போதும் அவர்கள் திராவிடக் கலாச்சாரத்தை உடையவர்கள்” என்று எழுதியிருக்கிறார். அதை வைத்துப் பூகோளத்தை வைத்து இந்தியா ஒரு நாடல்ல என்று சொல்லுகிறோம். ஆனால் ஆளவந்தார்கள் சௌகரியத்திற்காக இந்தியா ஒரு நாடு என்று சொல்லுகிறார்கள். பள்ளிப் பிள்ளைகள் கதை படிப்பார்கள். விறகு கட்டாக, ஒன்றாக இருந்தால் வலிவு என்று. அமைச்சர் கக்கன்கூட அந்த கதையைச் சொல்லி, ஆகவே இந்தியா ஒன்றாக இருக்க வேண்டும் என்று சொல்லி வருகிறார். நான் சொல்லுகிறேன் அந்த வாதம்கூட தவறு என்று! விறகு கட்டாக இருந்தால் பயன் இல்லை! அப்படியே அடுப்பில் வைக்க முடியாது, உடைத்துத்தான், தனித்தனியாகப் பிரித்து எடுத்துத்தான் அடுப்பில் வைக்க வேண்டும். அதைப்போல இந்தியா கட்டாக ஒரு காலத்தில் இருந்தது. வெள்ளைக்காரனை ஓட்ட வேண்டிய நேரத்தில்—லாலா லஜபதி ராய், வ. உ. சி., ராஜாஜி இன்னும் லக்னோவைச் சேர்ந்த தலைவர்கள் இந்தியா ஒன்றாக இருந்தால் சுயராஜ்யம் பெறுவதறகு சௌகர்யம் என்பதற்காகச் சொன்னார்கள். ஆனால் இப்போது சுதந்திரம் பெற்றாகி விட்டது. ஆகவே ஒன்றாக இருந்ததைப் பிரியுங்கள் என்று சொல்லுகிறோம், இல்லையேல் கட்டாக இருந்தால் எடுத்துக்கொண்டு வேறு மார்க்கெட்டுக்குச்சென்று விடுவார்கள் என்று சொல்லுகிறோம், பிரிந்தால் என்ன கெடுதல் என்று அவர்களில் யாரும் இதுவரையில் சொன்னது இல்லை! இந்தியா எப்போது ஒன்றாக இருந்தது? தமிழகம் தனியாக இருந்தது என்று சொல்லுவதற்கு வரலாறு இருக்கிறது. ஆகையினால் இந்தியா என்பது வெள்ளைக்காரன் துப்பாக்கியைக் காட்டி, டெல்லியில் ஆட்சி வைத்துக் கொண்டிருந்தபோது இந்தியா ஒன்றாக இருந்தது. ஆனால் இப்போது அது தேவையில்லை.

இதுதான் நாங்கள் தருகிற திட்டம், இதைத் தெரிந்து கொள்ளாத காங்கிரஸ்காரர்கள். முதலமைச்சர் காமராசர், நிதியமைச்சர் சுப்பரமண்யம் ஆகியோர் ‘நாங்கள் அண்ணாத்துரையைத் திட்டம் கேட்டோம், அண்ணாத்துரை கசாப்புக் கடை வைக்கச் சொல்லுகிறான்’ என்றுதான் சொன்னார்கள். திராவிட நாடு திராவிடரிடத்தில் இருக்கவேண்டும்—வடக்கே இருக்கக்கூடாது! அதை நீக்குவதுதான் எங்களுடைய மூலாதாரத் திட்டம். சென்ற ஆண்டு நான் சட்டசபை விவாதத்தின்போது வரி மேல் வரி போட்டு நாட்டு மக்களை வாட்டுகிறீர்களே என்று கேட்டேன். அதற்கு சுப்பரமணியம் ‘வரி போடாமல் ஆட்சி செய்ய முடியுமா?’ என்று கேட்டார். அதை நாங்கள் மறுக்கவில்லை. எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் வரி போடாமல் ஆட்சி நடத்த முடியாது. ஆனால் போடுகிற வரி ஏழை மக்களைப் பாதிக்காத வகையில் அந்த வரி இருக்க வேண்டும். அதேநேரத்தில் ஆட்சியை ஒழுங்காக நடத்துவதற்கு வருமானத்தைப் பெருக்கவேண்டும் என்று நான் சொன்னேன். நாகரீகமுள்ள நாடுகள் வருமானத்தைப் பெருக்குகிறது. வரியைக் குறைக்கிறது. சர்க்காரே பலவிதத் தொழில்களை ஏற்று நடத்தி அதன் மூலம் பணம் சம்பாதிக்கிறது ஆஸ்திரேலிய நாடு ஆடு மாடுகளை வெட்டி இறைச்சியைப் பக்குவப்படுத்தி, அதை அதை டப்பிகளில் அடைத்து லண்டனுக்கும் மற்ற நாடுகளுக்கும் அனுப்பி வியாபாரம்செய்து அது பிழைக்கிறது. இதைத்தான் நான் சொல்லும் போது ஆகா அண்ணாத்துரை கசாப்புக் கடை வைக்கச் சொல்லுகிறான் என்று சொல்லுகிறார். தம்பிக்கு வேலை இல்லாவிட்டால், அண்ணன் தம்பியைக் கூப்பிட்டு கர்ணம் அடித்தாவது பிழை என்று சொன்னால் — தம்பி அதைக் கேட்டுஅண்ணன் கர்ணம் அடித்துப் பிழை என்று சொன்னான்— என்று கர்ணம் அடிக்கத் தொடங்கினால் என்ன பொருள். அண்ணன் சொன்னதைப் புரிந்து கொள்ளவல்லை என்று பொருள். அதைப் போல் நிதியமைச்சர் சுப்பிரமணியம் நான் சொன்னதைப் புரிந்து கொள்ளாமல் ஆகா கசாப்புக்கடை வைக்கச் சொல்லுகிறான் அண்ணாதுரை என்று ஊர் ஊராகச் சொல்லி வந்தார்.

அதற்கு நான் பதில் சொல்லுவதற்கு ஆறு மாதங்கள் ஆயிற்று. காரணம் அதற்குப் பிறகு ஆறு திங்கள் கழித்துத்தான் சட்ட சபை மீண்டும் கூடிற்று, சட்டம் இயற்றப்படும் சட்ட மன்றம் நம் நாட்டில் இந்த லட்சணத்தில்தான் இருக்கிறது. ஆறு மாதங்கள் கழித்து நடைபெற்ற சட்டசபையில் அவருக்கு டென்மார்க் நாடு, ஸ்விட்சர்லாந்து நாடு போலந்து நாடு ஆகிய நாடுகள் எப்படிப் பிழைக்கிறது என்று தெளிவாக எடுத்துச் சொன்னேன்.

அதற்கு எந்த அமைச்சரும் சட்ட சபையில் அது முடியாது என்று மறுத்துப் பேசவில்லை. அதற்கு மாறாக இப்போது என்னை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் கமிட்டியில் போட்டிருக்கிறார்கள்.

அதை விட்டுவிட்டு அமைச்சர் கசாப்புக் கடை வைக்ககச் சொல்லுகிறான் அண்ணாத்துரை என்று சொல்லுகிறார். நான் கேட்கிறேன் அப்படியே வைத்தால் என்ன அதனால் அவமானம் நேர்ந்து விடும்? இந்த நாட்டில் தான் வயிற்றுக்குக் கஞ்சியில்லாமல் மனிதன் கட்டை வெட்டுகிறான். சோத்துக்கு வழியில்லாமல் குப்பைக் கூட்டுகிறான். பிழைக்க வழியில்லாமல் வேறு நாடுகளுக்குச் சென்று தமிழன் அட்டைக் கடிக்கும் அரணைக் கடிக்கும் ஆளாகி இலங்கைத் தேயிலைத் தோட்டங்களிலே அவதிப்படுகிறார்கள். மலஜலம் எடுக்கிறான் தமிழன். பம்பாய்க்குச் சென்று செருப்புத் தைத்து பாலீஷ் போட்டு வயிறு வளர்க்கிறான். டெல்லிக்குச் சென்று தமிழன் வீதிகளிலே பிச்சை எடுக்கிறான். அதைப்பற்றி சிறிது கூட கவலை இல்லை அமைச்சருக்கு. வெட்கமில்லை— ரோஷமில்லை, ஆகா தமிழன் இப்படிபா அவதிக்கு ஆளாவது என்று நினைத்துப் பார்த்து அவர்களுடைய வாழ்க்கை உயநவதற்கு வழி செய்வதற்கு வக்கு இல்லை, வகையில்லை. நான் ஏதோ கசாப்புக்கடை வைக்கச் சொன்னேன் என்று மட்டும் கோபிக்கிறார்கள். பணக்காரனுக்கு வாழ்க்கைப்பட்டு தாய் வீடு திரும்பிய மகளைப் பார்த்து தாய், அந்த கன்றைப் பிடித்து வா என்றால்—மகள் ஆகா என்னையா கன்றை இழுத்து வரச் சொல்லுகிறாய் என்றால்—தாய் என்ன சொல்லுவாள்!—என் வயிற்றிலே பிறந்து நான் உன்னைப் பாராட்டிச் சீராட்டி வளர்த்ததினால்தான் நீ பணக்காரனுக்கு வாழ்க்கைப்பட்டாய் என்று எந்தத் தாயும் சொல்ல மாட்டாள். மாறாக அழுதுகாட்டுவாள். அதைப் போல இந்த மந்திரிகள் புதிதாக ராங்கி பெற்று விட்டவர்கள் போலப் பேசுகிறார்கள், இரண்டு ஆடு வெட்டினால் அது கசாப்புக்கடை என்று சொல்லுவார்கள். இரு நூறு ஆடு வெட்டினால் அதை ஆட்டுத் தொட்டி என்று சொல்லுவார்கள் ,இரண்டாயிரம் ஆடுகள் வெட்டினால் அதை ஆடு வெட்டும் தொழிற்சாலை என்று சொல்லுவார்கள். “MEAT INDUSTRY” என்று அதைச் சொல்லுவார்கள். இரண்டு தகர டம்ளர் இருந்தால் தகரக் கடை என்று சொல்லுவார்கள். இரு நூறு தகர டம்ளர்கள் இருந்தால் அதைத் தகரத் தொழிற் சாலை என்று சொல்லுவார்கள். இரண்டாயிரம் தகரக் குவளைகள் செய்தால் அதைத் தகரத் தொழிற்சாலை “TIN INDUSTRY” என்று சொல்லுவார்கள்.

அதைப்போல நான் ஒரு பெரியதொரு தொழிலை நடத்தி அதன் மூலம் பெரும் பொருள் ஈட்டலாம் என்று தான் சொன்னேன். அதை அமைச்சர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை.

எனவே நாங்கள் “திராவிட நாடு திராவிடருக்கே” என்றால் அதில் எல்லாத் திட்டங்களும் அடங்கி இருக்கிறது. இந்தத் திட்டம் எந்த அளவிற்குச் செல்வாக்குப் பெற்றிருக்கிறது என்றால் எந்த மந்திரியும் இதைப் பற்றித்தான் இப்போது அவர்கள், செல்லுகிற இடங்களில் எல்லாம் பேசுகிறார்கள். எங்களுடைய கோரிக்கை இன்றைக்குக் காட்டுக் கூச்சலாகிவிடவில்லை. வீண் போகவில்லை. அப்படிப்பட்டவர்கள்தான் தமிழகத்தில் மட்டும் இன்றைக்கு இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் கழகத்தில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். நம்முடைய கொள்கைகள். இலட்சியம் கிராபத்து மக்கள் மத்தியில் ஆழப் பதிய வேண்டுமானால்—கோம்பையைப் போன்ற ஊரில் இருக்கும் இளைஞர்கள் பெரியவர்கள் இதைப் பற்றிப் பேச வேண்டும். நம்முடைய கொள்கைகளை விளக்கிடும் வகையில் துண்டு வெளியீடுகள் அச்சிட்டு வழங்க வேண்டும். சிறிய கூட்டம் நடத்தி நாட்டு மக்கள் உள்ளத்தில் நம்முடைய கொள்கைகளைப் பதியச் செய்ய வேண்டும்! ‘திராவிட நாடு’ நாங்கள் ஆர அமர சிந்தித்துத்தான் கேட்கிறோம்! அற்ப ஆசைகளுக்காக அல்ல! ஓட்டு வேட்டைக்காக அல்ல! மற்ற நாட்டுக்காரர்கள் நம்மைப் பார்த்து மதிக்க வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன்! எனவே இளைஞர்களாகிய நீங்கள் அத்தகைய காரியங்களைச் செய்ய வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொண்டு உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்.

பிரியாத கட்சிகள் பெறாத வலிவை பிரிந்து வந்த நாம் பெற்றிருக்கிறோம்!

கடல் கடந்த தமிழரின் நிலை பற்றி நினைக்காத காமராசர் ஒரு பச்சைத் தமிழரா?

கவிஞர் கண்ணதாசன் முழக்கம்!

சென்னை 61-வது வட்டம் மக்கள் மன்றத்தின் சார்பில் அறிஞர் அண்ணாவின் பொன் விழா கூட்டம் கடந்த 14-11-59 அன்று புரசையில் நடைபெற்றது.

இப்பொன் விழா கூட்டத்திற்கு தோழர் சுந்தரபாஷ்யம் அவர்கள் தலைமை வகித்தார். மற்றும் தோழர்கள் சுந்தரதாஸ், நெல்லைச்சுடர், மக்கள் மன்றத்தின் செயலாளர் கணேசன், ‘நம் நாடு’ துணை ஆசிரியர் ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சாதனைகள் பற்றியும், நம்மை ஆள்கின்ற காங்கிரஸ் கட்சியின் திமிர் பிடித்த போக்கைக் கண்டித்தும் பேசினர்.

அடுத்து கவிஞர் கண்ணதாசன் சொற்பொழிவாற்றினார். கவிஞர் கண்ணதாசன் அவர்களுக்கு பல மன்றங்கள், தொழிலகங்கள் சார்பில் மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும், புகைப் படங்களும் அளிக்கப்பட்டன.

கவிஞர் கண்ணதாசன் அவர்கள் பேசியதாவது—

அன்பு கெமிய தலைவர் அவர்களே! அருமை நண்பர்களே! மக்கள் மன்றத்தின் சார்பில் அறிஞர் அண்ணாவின் பொன் விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தமைக்கு பேருவகைக் கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய தோழர்களும். நண்பர் ஆர்.எஸ். பாண்டியனும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை, கோட்பாடுகளையும் நம் நாட்டு அரசியல் பற்றியும் உங்கள் மத்தியிலே எடுத்துச் சொன்னார்கள்.

நாட்டிலே, இடைவிடாமல் மக்கள் மத்தியிலே யாராவது பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்றால், அது நாம் தான்! நாம் ஜனநாயக பிரச்சாரம் செய்து வருகிறோம். நம் பிரச்சாரத்தால் ஏராளமான நல்ல விஷயங்களை மக்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி மாற்றார் தாக்கிப் பேசி வருகிறார்கள். தி.மு.க. என்ன சாதித்து விட்டது. அதன் தலைவர்களுக்கு என்ன தெரியும் என்று ஏசி வருகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி தெரியாதவர்கள் ஒன்று, நேற்றுப் பிறந்தவர்களாக இருக்க வேண்டும். இல்லையென்றால் அங்கஹீன மேற்பட்டு உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருக்கும் தசைப் பிண்டங்களாக இருக்க வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்பது என்ன, அதன் தலைவர்கள் யார், அனைத்தும் எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தான். பின்பு ஏன், எதற்காக இந்தக் கூட்டம்? சொன்னதைத் தானே மீண்டும் சொல்லப் போகிறோம்!

சொன்னதை சொல்லிவிட்டோம். உட்கார்ந்து பார்ப்போம் என்பதல்ல நமது நோக்கம். நாம் சொன்னோம், நாம் சொன்ன கருத்துக்கள் மக்கள் மனதிலே இருந்து மறைந்து விடக்கூடாது என்பதற்காகவே இப்படி பல கூட்டங்களைக் கூட்டுகிறோம்.

அண்ணாவின் பிறந்த நாள் எப்போது என்று எதிர்பார்த்தவன் நான்தான். எப்படியோ கண்டு பிடித்து அண்ணா பிறந்த நாள் இன்ன தேதி என்று முதன்முதலில் வெளியிட்டவனும் நான்தான். அண்ணாவின் பொன் விழாவை கொண்டாட வேண்டுமென்று கேள்வி பதில் மூலம் கேட்டுக் கொண்டதும் நான்தான். அண்ணாவின் பொன் விழா நாடெங்கிலும் கொண்டாடப்படுகிறது என்று சொல்லும் போது தமிழ் நாடு மட்டுமல்ல பர்மா, இலங்கை போன்ற கடல் கடந்த நாடுகளிலும், கர்னாடகத்தில் 62 திராவிட முன்னேற்றக் கழக கிளைகள் சார்பிலும், ஆந்திரத்தில் 13 கிளைகள் சார்பிலும் கேரளத்துமக்களும், பம்பாயிலே வாழ்கின்ற தமிழர்களும், தாராவி, மாதுங்கா பகுதியிலே வாழ்கின்றதமிழர்களும், ஆமதாபாத் தோழர்களும் கொண்டாடினார்கள்.

திராவிடத்திற்கு அப்பாலே கடல் கடந்து செல்கின்ற தமிழன் தொழில் புரிந்து பொருளீட்டுவதற்கு போகிறான். கடல் கடந்து செல்கின்றான் என்று சொல்லும்போது அவன் சுமந்து செல்வது இரண்டு. ஒன்று அவனது உடம்பு, மற்றொன்று உழைப்பு!

பத்ராவதி இரும்புத் தொழிற் சாலையிலே 7000 பேர் வேலை செய்கிறார்கள். ஏழாயிரம்தொழிலாளர்களில் நாலாயிரம் பேர் தமிழர்கள்இருக்கிறார்கள். நாலாயிரம் தமிழர்களிலே இரண்டாயிரத்து முன்னூறு பேர் திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர்களாக இருக்கின்றார்கள்,

சில தினங்களுக்கு முன்னாலே பத்ராவதிக்கு செல்லும் வாய்ப்பு கிட்டியது. சென்ற போது அங்கே திராவிட முன்னேற்றக் கழக கிளைக் கழகங்கள் இருக்குமென்று நான் நினைக்கவில்லை. இரண்டாயிரத்து முன்னூறு தோழர்கள் இருக்கிறார்கள் என்று நண்பர்கள் கூறினார்கள். அவர்கள் பண்பாடும் நாகரிகமும் நம்மைப் போன்றே இருந்தது. திராவிட நாகரிகம், கலாச்சாரம் எல்லாம் ஒத்திருந்ததைப் பார்த்தேன்.

நான் தமிழன்—நீ கன்னடத்துக்காரன் என்ற பேதம் பாராட்டவில்லை. நான் தமிழன் நீ தெலுங்கன் என்றும் பேசிக் கொள்ளவில்லை. ஒருவருக்கொருவர் பேதமின்றி இருக்கிறார்கள். அவர்களைப் பார்க்கும் போது பேதம் இருப்பதாகவே தெரியாது.

அங்கே இருக்கின்ற பிரஜா சோஷலிஸ்ட் கட்சியினர் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்கிறார்கள். தென்னாட்டில் தொழில் வளம் பெருக வேண்டுமென்ற அக்கரை அவர்களுக்கும் இருக்கிறது.

கருநாடக பகுதியைச் சேர்ந்த பெங்களூரிலே இருந்து 100 மைலுககு அப்பாலே உள்ள அரிசிக்கரை என்னும் கிராமத்தில் அண்ணா படிப்பகத்தைத் துவக்கி யிருக்கிறார்கள். நான் செல்லுகின்றபோது என்னுடன் வந்திருந்த நண்பர் பதி, காரை நிறுத்தி, அங்குள்ள நண்பர்களிடம் அளவளாவினார். நான் பெரிதும் ஆச்சரியப்பட்டேன்.

இலங்கையில் எல்லாப்பகுதியிலும் இருவண்ணக் கொடிகள் பறக்காத இடமில்லை. மட்டக்களப்பு போன்ற பகுதிகளில் மனமகிழ்ந்து வரவேற்கின்றார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை விளக்கப் புத்தகம் என்றால் பத்தாயிரக் கணக்கில் விற்பனையாகின்றன, அறிஞர் அண்ணாவின் சொற்பொழிவு புத்தகம் மட்டும் லட்சக்கணக்கில் விற்பனையானதாக ஒரு நண்பர் என்னிடத்திலே கூறினார்.

அறிஞர் அண்ணா அவர்கள் தலைவர் என்ற ஒரே பெருமைதான் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு துரித வளர்ச்சியைக் கொடுத்தது.

திராவிடர் கழகம் இருந்த போது கம்யூனிஸ்டு கட்சியும் இருந்தது. சோஷலிஸ்டு கட்சியும் இருந்தது. நாம் திராவிட கழகத்திலே இருந்து பிரிந்து வந்த பின்னால் பெற்றிருக்கும் வளர்ச்சியை அக்கட்சிகள் பெறவில்லை.

பெரியார் எதைச் சொன்னாலும் தாங்கிக் கொள்ளும் மனம் வேண்டும். அவரை விட்டுப் பிரிந்தவர்கள் அரசியலில் தேறியவர்களே கிடையாது, எதையும் தாங்கிக் கொள்ளும் மனப் பக்குவத்தை அறிஞர் அண்ணா பெற்றிருந்த காரணத்தால்தான் கழகம் பெருவளர்ச்சி பெற்றிருப்பதற்கு காரணம்.

திராவிடர் கழகத்திலே இருந்து பிரிவதற்கு, முன்னாலே புதுக் கழகம் துவக்க அண்ணா சம்மதிக்கவில்லை. அரசியலிலிருந்து ஓய்வுபெற வேண்டுமென்றே நினைத்து சம்பத்தை மேல் நாடு சென்று படித்து வா என்று சொன்னார்.

பெரியார் விபரீத பாதையிலே செல்கிறார் என்று தெரிகிறது. சொன்னால் கேட்கமாட்டார் என்றும் புரிகிறது. புரிந்தும் அவர் வழியில் தலையிடுவது சரியாகாது. ஆகையினால்நான் தனியாக ஒதுங்கி எழுத்து வேலையில் ஈடுபடப் போகிறேன் என்று முடித்து விட்டார்.

இந்தியா சுதந்திரம் அடைந்த நாளை பெரியார் துக்கநாள் என்று சொன்னார். அண்ணா அவர்கள் துக்க நாள் அல்ல—நம் நாட்டைவிட்டு பொது எதிரி ஒழிந்த நாள்—மகிழ்ச்சி நாள் என்று எழுதினார். அப்போது கழகத் தோழர்கள் பலரிடமிருந்து எதிர்ப்புக் கடிதங்கள் குவிந்தன. பெரியாரின் போககிலே அதிருப்தி கொண்டவர்கள் புதுக் கழகம் துவக்க வேண்டுமென கடிதங்கள் எழுதினர்.

அண்ணா அப்போது புதுக் கழகம் துவக்கும் எண்ணம் கிடையாது என்றார், புதுக் கழகம் ஆரம்பித்தால் வலிவு கிடைக்கும் என்பது என்ன நிச்சயம் என்று கூறினார். பிரிந்துதான் தீர வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். தயக்கத்தோடு ஏற்றுக் கொண்டார். கழகத்தைத் துவக்கிய போது ‘உங்களை நம்பித் தான் இப்பணியை துவக்குகிறேன்’ என்றார்.

பெரியாரிடம் இருக்கின்ற பணம், அச்சகம் அத்தனையும் அவரிடமே இருக்கட்டும். இந்தக் கழகம், தன் சொந்தக் கால் வலிவில் ஏற்படுத்த முடியுமென்றால் நிறுவுவோம் என்றார். மெஜாரிட்டி உறுப்பினர்களின் அபிப்பிராயப்படி எந்தப் பணத்தையும் லட்சியப்படுத்தாமல் வெளியேறினோம்.

அன்னக்காவடி என்றால் முதுகிலே அடித்தால் சாம்பல் பறக்க வேண்டும், அதுதான் ஆண்டிக்கு லட்சணம். ஆண்டியைப் போல துண்டை உதறி தோளில் போட்டுக் கொண்டு வெளியே வந்தோம், அப்போது தீவிரமாக எதிர்த்தவர் குருசாமிதான் அதே குருசாமி இன்று பெரியாரிடத்திலே இருக்கிறார்.

பெரியாரிடமிருந்து பிரிந்த நேரத்தில், பெரியார் ‘என்னைக் கொலை செய்ய முயன்றார்கள். சம்பத்தும் உடன் இருந்தான்’ என்றெல்லாம் பிரச்சாரம்செய்ததோடு மட்டுமல்லாமல் பத்திரிகையிலும் எழுதினார். சம்பத் வழக்கு தொடர்ந்ததற்குப் பின்னாலே பெரியார், தெரியாமல் எழுதிவிட்டேன்’ என்றார்.

(12-ம் பக்கம் பார்க்க)

Registered as a Newspaper in CEYLON
Regd No.M. 7074 MALAIMANI Phone No. 832

வடநாடு என்னும் வண்டியை, காமராசர் சர்க்கார் கண்ணை மூடிக் கொண்டு இழுத்துச் செல்லுகிறது!

கண்ணதாசன் பேச்சு

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரியார் தாக்குகின்ற பாணியே வேறு. அவர் தாக்குவதைப் போன்ற முறைகள்வேறு யாருக்கும் வராது! காமராசர் தாக்கிப் பேசினார், கக்கன் கதறிப்பார்த்தார், சிவஞானம் தாக்கி தாக்கி சலித்து விட்டார்! பெரியார், பேசத்தகாத வார்த்தைகளினால், கொடிய முறையில் தாக்க ஆரம்பித்து விட்டார், அண்ணா அவரை எதிர்த்துப் பேசியிருப்பாரா என்றால் இல்லவே இல்லை!

கடுமையாக தாக்குகிறார் என்று தெரிந்த பின்னும் யாராகிலும் சும்மா இருக்க முடியுமா? என்னை இப்படி தாக்கிப் பேசியிருந்தால் என்ன செய்வேனோ எனக்குப் புரியாது. அவர் தாக்குதல் எல்லாம் கடலில் விட்ட அம்பு அடித்தளத்தில் பதுங்கியதுபோல் அடங்கி விட்டது. அண்ணா கடல் போன்றவர். கடலில் கணைபாய்கின்ற போது பிரிவு ஏற்பட்டாலும் உடனே தண்ணீர் சேர்ந்து விடுகிறது! பெரியார் தாக்கினார், அவர் விட்ட சொல் லம்புகள் அண்ணாவின் உடம்பிலே காயங்களை உண்டாக்கவில்லை. கடலின் அடித்தளத்தில் அமிழ்ந்து விட்டது போல அமிழ்ந்து விட்டது!

பெரியார் ஏன் தாக்கிப் பேசுகிறாரென்றால் நாம் எங்கே வேலை செய்ய அச்சப்படுகிறோமோ, கழக வளர்ச்சிக்கான பணியிலே தளர்ந்து விடக் கூடாது என்பதற்காக ஊக்கமளிக்கிறார்.

தந்தை பெரியாரே தளர்ந்து விட மாட்டோம். உங்கள் தடிகாட்டும் வழியிலே செல்வோம்'' என்று பதில் சொன்னார் அண்ணா தாக்கிப் பேசிய இடத்திலே, கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்கே குழப்பம் ஏற்பட்டு விடும்.

கடந்த தேர்தலின் போது காஞ்சிபுரத்தில் பெரியார் பேசும் போது 'அண்ணாதுரைக்கு ஓட்டுப் போடாதீர்கள்' என்று பேசினார்.

அண்ணா அவர்கள் ஒரு கூட்டத்தில்—

பெரியார், அண்ணாதுரைக்கு ஓட்டளிக்கக் கூடாது என்று ஏன் சொன்னார் தெரியுமா? நீங்கள் ஓட்டளித்து நான் சட்டசபைக்கு சென்று எம். எல். ஏ. வாகவோ, மந்திரியாகவோ ஆகி விடுவேன். அந்தப்பதவி மயக்கத்தில் வீழ்ந்து கழகத்தை மறந்து விடுவேனோ என்று பயந்து பெரியார் சொன்னார். பெரியார் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன் நான் மயங்கி விட மாட்டேன்' என்றார் அங்கே கேட்டவர்களும் இது தான் நியாயம் என்று சொன்னார்கள். அண்ணா ஒரு போதும் தாக்கிப் பேசியதில்லை, கழகம் கண்ட இடமெல்லாம் வளர்ந்து இருக்கிறது.

நான் ஒரு வார்த்தையில் தாக்கிப்பேசினால் ம.பொ.சிவஞானம் மூன்று வார்த்தைகளால் திட்டுகிறார். என்ன திட்டினாலும், எப்படிப் பேசினாலும் அண்ணா அசைய மாட்டார். அவரது மீசையும் அசையாது. வெற்றிலை போட்டுக் கொள்கின்ற போது மட்டும் ஒரு முறை அசையும்.

தூரத்திலே ஒருவன் வருகிறான் என்றால் அவன் எதற்காக வருகிறான். இத்தனை நாள் வராதவன் இன்று மட்டும் வருவானேன் என்று நினைப்பார். ஒரு வினாடி, நெற்றி ஒரு முறை ஏறி இறங்கும். அவன் படி கடந்து உள்ளே வருவதற்குள் எந்தக் காரியத்திற்காக வருகிறான் என்று தெரிந்து கொள்வார்.

எதிரி பேச வந்தால் நீ முதலில் பேசாதே! விஷயம் தெரிந்து கொண்ட பின் பேசு என்பார். பேச வந்தவர்கள் உள்ளத்திலிருப்பதை தொட்டி, பேசி விட்டு சென்றிருக்கிறார்களே தவிர, அவரிடமிருந்து விஷயம்தெரிந்து கொண்டவர்கள் யாருமில்லை.

காமராசர் நம்மை பிச்சைக்காரர்கள், முட்டாள் என்றெல்லாம் பேசினார்.

அன்று - ஆச்சாரியார் நசுக்கி விடுவேன் என்றார், இன்று தனி கட்சி ஆரம்பித்திருக்கிறார், தனிப்பட்ட முறையில் தி. மு. க.வை தாக்காதீர்கள் என்று தன் கட்சியினருக்கு ஆணையிட்டிருக்கிறார்!

நேற்று சொன்னதை இன்று மறப்பவர்கள், மறுப்பவர்கள் உண்டு. அண்ணா எப்பொழுது சொன்னதாக இருந்தாலும் நினைவில் வைத்துக் கொண்டிருப்பவர், அண்ணாவின் லட்சியத்தை மணிவிழாவிற்குள் காண்போம்! உடம்பை பேணி வளர்ப்பவர் அண்ணா!

அண்ணாதுரைக்கு அறிஞர் என்று பட்டம் கொடுத்தது யார் என்றார்கள். அண்ணாதுரைக்கு திட்டம் தெரியுமா என்றார் கக்கன். இவர் ஒரு அறிஞரா என்றார் காமராசர்! கேள்விகள் கேட்டார்கள். கேள்விகள் கேட்பதாலேயே கட்சி பலவீனப் பட்டு விட்டதா, இல்லை! நாம் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்லாமலேயே இளைத்தவர்கள் பலருண்டு! நாம் வலிவு பெற்றோம்!

சரித்திரத்தைக் காட்டினால் முடிந்து போகும் என்றார்கள். நாங்கள் பூகோளத்தைக் காட்டினால் உன் மூச்சே நின்று விடும்! நாம் யாருக்கு பதில் சொல்ல வேண்டும்! கேள்வி கேட்கும் தகுதி அவர்களுக்கு வேண்டும்.

முதன் முதலில் தோன்றிய இனம் மனித இனம் முதல் மனிதன் தமிழன். முதன் முதலில் தோன்றிய நாகரீகம் தமிழன் நாகரீகம், திராவிட நாகரீகம்!

மெக்சிகோ நகரத்தில் வாழ்கின்றவர்கள் முத்து, பாண்டி என்னும் தமிழ்ப் பெயர் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் அங்கே வாழ்கின்ற பெண்கள் தமிழ்நாகரீகம் போலவே தலை குனிந்து போகிறார்கள். கி. மு. முப்பதாயிரம் ஆண்டுகட்டு முன்னாலே இருந்து தமிழர் நாகரீகம் வளர்ந்து வருகிறது.

ஒரு பத்திரிகையில், எப்போதோ இருந்ததை இன்று அடைய தி. மு. க. காரர்கள் ஆசைப்படுகிறார்கள் என்று எழுதப்பட்டிருந்தது! உலகத்தில் முதல் குரங்கு தோன்றியதாக இருந்தாலும் அது தமிழ் குரங்காகத் தான் இருக்கும்.

காவேரியில் கல்லணை கட்டிய போது டில்லிக்கு தந்தி கொடுத்துவிட்டா கல்லணை கட்டினார் தஞ்சையிலே ராஜராஜசோழன் தஞ்சைக் கோவில் கட்டிய போது டில்லிக்கு தகவல் அனுப்பி விட்டா கட்டினான். வரி வசூலித்தான்! தனக்குத் தானே எல்லை வகுத்துக் கொண்டான்—வாழ்ந்தான்.

1200 ஆண்டுகட்கு முன்னாலே இருந்து எல்லை வகுத்து வாழ்ந்தவன் தமிழன்! திராவிடத்தின் எல்லை எது என்று கேட்ட போது சுகநானூறு, பதிற்றுப் பத்து, கலித்தொகை இன்னும் எத்தனையோ சங்க இலக்கியங்களிலே இருந்து எல்லையை எடுத்துக் காட்டினோம்! எத்தனையோ மேடைகளில் சொல்லியாகி விட்டது, இன்னும் கேட்கிறார்கள் திராவிடத்தின் எல்லை எது என்று! நாம் பதில் சொல்லிக் கொண்டே போனால் அவர்களுக்கு தெரியவில்லையா, அல்லது நமக்குப் புரியவில்லையா என்ற குழப்பமேற்பட்டுவிடும்!

உலக வரலாற்றில் முதன் முதலாகத் தோன்றிய மொழி தமிழ் மொழி! வாணிபத்திலே சிறந்தது தமிழகம். கடலுக்கு அடியிலே இருக்கும் முத்துக்கு மதிப்பை போட்டவன் தமிழன்! தங்கத்தை வெட்டி யெடுத்தவன் தமிழன்! சுரங்கத்திலே இன்னும் வேலை செய்பவர்கள் தமிழர்க[ள்] சுரங்கத்திலே வேலை செய்[...] தொழிலாளர்கள் தமிழ்ப் பெ[...]ரையே பெரும்பாலும்வைத்தி[...]ப்பதைப்பார்க்கிறோம்! தமிழர் நாகரீகம் தலை சிறந்த நா[...]மாக விளங்குகிறது!

திருமணம் என்றால், வ[...] திறமையைப் பார்த்து ப[...] முடித்தார்கள் தமிழர்கள், இ[...] வெட்டுக்கல்லை தூக்க வேண்[டு]மென்றும், காளையை அடக்[கு]தல்—புலியை அடக்குத[ல்] போன்ற வீரச் செயல்[...] புரிந்து திருமணம் செ[ய்து] கொண்டார்கள், இன்று அ[...] செய்யச் சொன்னால் இங்கு[...]வர்களில் எத்தனை பேருக்கு த[ிரு]மணம் நடந்திருக்கும்' வீ[ர] செயல் புரிந்து திருமண[ம்] புரிந்து கொண்டான் தமிழ[ன்] முப்பதாயிரம் ஆண்டுகட்[கு] முன்!

வடக்கே போனான் இ[...] வரம்பன். வெற்றிக் கொ[...] நாட்டினான். கலிங்கத்தை அ[...] அடித்தான், வென்றான் கரு[...]கரத்தொண்டமான்!

தெற்கே வாழ்ந்தான் என்[...] வடக்கு என்றால் சாவு என்[...] பொருள். தென்றல் வந்தா[ல்] காதலர்களுக்கு விளையாட்டு, தெற்கே இருந்து வீசுவது தென்றல் காற்று, வடக்கே இருந்து வீசுவது வாடைக் காற்று!

(9-ம் பக்கம் பார்க்க)

(கடைசிச் செய்தி)

சென்னை நகர சபை மேயர் தேர்தல்!

காங்கிரஸ் வலை வீசுகிறது!

இன்றைய நிலவரம்

சென்னை, நவ 21—

சென்னை நகரசபையில் மேயர் பதவியை மீண்டும் கைப்பற்ற காங்கிரஸ் பகீரதப் பிரயத்தனம் செய்யத் தொடங்கியுள்ளனர். காங்கிரஸ் ஓட்டுக்கு வலை வீசிக் கொண்டிருக்கிறது. இன்றைய நிலவரம் ரூ25,000 என்று கூறப்படுகிறது!

நாளுக்கு நாள் இத்தொகை உயரலாம் என்றும் கருதப்படுகிறது!

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி. எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ். 404 திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5.
அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை